UNIVERSITY OF JAFFNA LIBRARY 26 APR 2013 PERIODICALS DIVISION


# எழுகதிர்

ஐரோப்பிய பதிப்பு

ELUKATHIR

Rs20 Euro0.50

வாரஇதழ் இதழ்: 32 12.03.2013


## தமிழகத்திற்கான பயண எச்சரிக்கை: இந்திய அதிகாரிகளுடன் ஆலோசனை!

இலங்கையர்களின் தமிழகத்திற்கான விஜயம் தொடர்பில் பயண எச்சரிக்கை விடுக்கப்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. தமிழகத்திற்கான பயணங்கள் தொடர்பில் எச்சரிக்கை விடுப்பது குறித்து வெளிவிவகார அமைச்சு கண்காணித்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்திய அதிகாரிகளுடன் இந்த விடயம் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டு வருவதாக வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ரொட்னி பெரேரா தெரிவித்துள்ளார்.இலங்கையர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படும் என இந்தியா உறுதியளித்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.அண்மைக்காலமாக தமிழகத்தில் அமைந்துள்ள இலங்கை நிறுவனங்கள் மற்றும் இலங்கைப் பிரஜைகள் மீது தாக்குதல்கள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.தமிழகத்தின் நிலைமைகள் அவதானிக்கப்பட்டு வருவதாகவும் ரொட்னி பெரேரா தெரிவித்துள்ளார்.

# சிறிலங்கா எதற்கும் ஒத்துழைக்கவில்லை:அமெரிக்கா

# இன்னும் வலுவான பிரேரணை தேவை: கனடா

# இறுதிவரை மௌனம் காத்த இந்தியா!

ஐ.நா மனித உரிமைச் சபையில் சிறிலங்கா தொடர்பில் அமெரிக்காவினால் கொண்டு வரப்படவுள்ள பிரேரணனையின் இரண்டாம் நகல்வரைவு, உறுப்பு நாடுகளுக்கு அமெரிக்காவினால் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டிருந்த நிலையில், இது தொடர்பிலான கருத்தறியும் உப மாநாடொன்று கடந்த வெள்ளிக்கிழமை (08-03-2013) இடம்பெற்றுள்ளது.

எதிர்வரும் 13ம் திகதிகளில் இந்த பிரேரணை இறுதி வரைவினை சபையில் அமெரிக்கா உத்தியோகபூர்வமாக சமர்பிக்கும் என எதிர்பார்கப்படுகின்றது. இந்நிலையில் பிரேரணை இறுதி வரைவினை மேற்கொள்வதற்காக, நாடுகளது கருத்துக்களை உள்வாங்கும் பொருட்டு இந்த உப மாநாட்டினை அமெரிக்கா ஏற்பாடு செய்திருந்தது.

இந்த உப மாநாட்டில் பிரேரணை தொடர்பில் மேற்குலக நாடுகள் இறுக்கமானவும் உறுதியானதுமான நிலைப்பாட்டினை வெளிப்படுத்தியிருக்க, சிறிலங்காவின் நேச நாடுகள் சில எதிர்ப்பினைத் வெளிக்காட்டியிருந்ததாகவும், இந்தியா இறுதிவரை மௌனமாகவே இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த உபமாநாட்டில் சிறிலங்கா தரப்பும் தன்னுடைய கருத்துக்களை வழங்குவதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருந்தது.

எதிர்வரும் 13-14ல் திகதிகளில் பிரேரணையின் இறுதி வரைவினை அமெரிக்கா சபையில் சமர்பிக்கும் என எதிர்பார்கப்படுவதோடு 21-22ம் திகதிகளில் வாக்கெடுப்புக்கு செல்லும் என தெரிவிக்கப்படுகின்றது.

## உறுப்பு நாடுகளின் பார்வைக்கு அமெரிக்க தீர்மான வரைவு!

இலங்கை தொடர்பாக ஐ.நா மன்ற மனித உரிமைகள் கவுன்சிலின் தற்போதைய அமர்வில் அமெரிக்கா கொண்டுவரவுள்ள தீர்மான வரைவு உறுப்பு நாடுகளின் பார்வைக்கு விடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இந்த வரைவுத் தீர்மானம் இலங்கை அரசு நியமித்த நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையும், தேசிய நடவடிக்கைத் திட்டமும், சர்வதேச சட்டங்கள் மீறப்பட்டதாக எழுந்த பாரிய குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கவில்லை என்று கூறுகிறது.

மேலும் இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதாக வரும் செய்திகள், மக்கள்

(11ம் பக்கம் பார்க்க)


## அமெரிக்க தீர்மானம் குறித்து இணக்கப்பாடு இல்லை!அரசு அறிவிப்பு!!

அமெரிக்கத் தீர்மானம் குறித்து இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளப் போவதில்லை என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு எதிராக

(11ம் பக்கம் பார்க்க)

# சுப்பிரமணிய சுவாமி- றொபோட் ஓ பிளெக் சந்திப்பு: இலங்கைக்கு ஆதரவாக பேச்சு!



இலங்கையில் நடந்ததாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் பற்றிய பிரேரணை வரைவு தொடர்பாக கொழும்புடன் பேசி கருத்தொற்றுமை ஒன்றை எட்ட வேண்டுமென ஜனதா கட்சியின் தலைவர் சுப்ரமணியன் சுவாமி அமெரிக்காவின் ஜனாதிபதி ஒபாமா தலைமையிலான நிர்வாகத்திடம் கேட்டுள்ளார்.

தெற்காசிய விடயங்களுக்கான உதவி இராஜாங்க செயலாளரான றொபேட் ஓ பிளேக்கை சந்தித்தபோதே சுப்ரமணியன் சுவாமி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கு நெருக்கமான பிரிவினை சக்திகளின் வெற்றியாக இந்த தீர்மானம் விளங்கிக்கொள்ளப்படலாம் எனவும் இது புலிகளின் மீட்சிக்கு வழிவகுக்கும் எனவும் அது யாருக்கும் நல்லதல்ல எனவும் அவர் கூறியுள்ளார்.


மனித உரிமை மீறல்கள் விசாரணை ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட இலங்கை அரசாங்கத்தினால் மட்டுமே மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை பொஸ்னியா அல்லது சயர் நாடுகளை போன்றதல்ல எனவும் அவர் கூறினார். இலங்கையை கட்டாயப்படுத்தி ஏற்றுக்கொள்ளவைக்கும் ஒரு விசாரணையை சர்வதேச ரீதியில் நியமிக்கப்பட்ட எந்த அமைப்பும் மேற்கொள்ளும் சாத்தியமில்லை. ஏனென்றால் ரஷ்யாவும் சீனாவும் தனது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அமெரிக்க தீர்மானம் இலங்கையின் மீது எதனையும் கட்டாயப்படுத்தி திணிக்கப் போவதில்லை எனவும் அது சர்வதேச அமைப்பு ஒன்றை விசாரணைக்காக அமைக்க கோருவதாக அமையாது எனவும் இராஜதந்திர திணைக்கள அதிகாரிகளின் பேச்சிலிருந்து தான் அறிந்து கொண்டதாக சுவாமி தெரிவித்துள்ளார்.

இது புலிகள் சார்ந்த சக்திகளுக்கு ஒரு பெரிய பின்னடைவாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அமெரிக்க இராஜாங்கத்திணைக்கள அதிகாரிகளுடன் சுமார் ஒரு மணித்தியாலத்திற்கும் மேலாக அவர் பேச்சு



வார்த்தை நடத்தியுள்ளார். அமெரிக்க அதிகாரிகளுடனான தனது சந்திப்புக் குறித்து சுவாமி தனது திருப்தியை வெளியிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஜப்பான் நிதியுதவி!

மன்னார் மாவட்டத்தின் அபிவிருத்திக்கு ஜப்பானிய அரசாங்கம் நிதியுதவியளித்துள்ளது. மன்னார் மாவட்டத்தில் உணவு பாதுகாப்புடன் கூடிய வருமான மீட்டும் செயற்றிட்டத்திற்காக ஜப்பானிய அரசாங்கம் சுமார் 8.2 மில்லியன் ரூபாவை நன்கொடை உதவியாக வழங்கியுள்ளது.

அடிமட்ட மனித பாதுகாப்புக்கான நன்கொடை திட்டத்தின் கீழ் இந்நிதியை ஜப்பான் அரசாங்கம்



வழங்கியிருக்கின்றது.

'மன்னாரில் நன்னீர் வளத்தை மேம்படுத்தும் செயற்றிட்ட திட்டமானது' பத்து களி மண் தடாகங்கள் உள்ளடங்கிய மீன் இன விருத்தி நிலையம், வண்டல் தடாகம், தண்ணீர் வழங்குவதற்கும் அகற்றுவதற்குமான கால்வாய்கள்இ ஒரு சேவை வழங்கல் கட்டிடம் அமைக்கவும் நீரியல் வளம் மற்றும் நன்னீர் மீன் பிடித்தலுக்கு தேவையான பயிற்சி வழங்குவதற்கு அவசியமான உபகரணங்கள் வழங்கவும் உதவும்.

தேசிய நீரியல் வள அபிவிருத்தி அதிகார சபையினால் அமுல்படுத்தப்படும் இந்த செயற்றிட்டதின் மூலம் மன்னார் மாவட்டத்தின் சிறிக்குளம் கிராமத்தில் அண்மையில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களின்; உணவு பாதுகாப்பையும் மற்றும் வருமான மீட்டலையும் அதிகரிக்க பங்களிப்புச் செய்யப்படும். இந்த சிறிய மீன் இன விருத்தி நிலையம் வருடமொன்றிற்கு 2 மில்லியன் மீன் குஞ்சுகளை உறபத்தி செய்வதை இலக்காகக் கொண்டுள்ளது. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் மீன் குஞ்சுகள் மன்னார் மாவட்டத்திலுள்ள கட்டுக்கரைக் குளத்திலும் மற்றைய குளங்களிலும் விடப்படும்.

இச்செயற்றிட்டத்தின் மூலம் 108 மீனவ சங்கங்களின் உறுப்பினர்கள் நேரடியாக பயனடைவதுடன் மன்னார் மாவட்டத்திலுள்ள 70,000 மீனவர்கள் மறைமுகமாகவும் பயனடைவர். இது தொடர்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கொழும்பிலுள்ள ஜப்பானிய தூதுவரின் வாசஸ்தலத்தில் கடந்த வாரம் கைச்சாத்திடப்பட்டது.

இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் நொபுஹிதொ ஹொபொ மற்றும் தேசிய நீரியல் வள அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நிமல் சந்திரரத்ன ஆகியோர் இந்நன்கொடை தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

## அங்காடி கடைத்தொகுதி திறந்து வைப்பு

யாழ். வேம்படி வீதியில் அமைக்கப்பட்ட 'யாழ். நகர் அங்காடி




கடைத்தொகுதி' கடந்த வாரம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

யாழ்..மாநகரசபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்து இந்த கடைத்தொகுதியைத் திறந்துவைத்தார்.

யாழ். நகர் அங்காடி கடைத்தொகுதியில் 107 கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. அனைத்துக்; கடைகளும் ஒரே மாதிரியாக அமைக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளுக்கு இணங்க ஒவ்வொரு கடையும் 36 ஆயிரம் ரூபா பெறுமதியில் அமைக்கப்பட்டுள்ளதாக யாழ். மாநகர முதல்வர் தெரிவித்தார்.

இந்தத் திறப்பு விழாவில் யாழ். மாநகர ஆணையாளர் பிரணவநாதன், மாநகர சபை உத்தியோகஸ்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## குர்ஆன் சதுக்கம்!

மட்டக்களப்பு காத்தான்குடி குட்வின் சந்தி அலங்காரமிக்க குர்ஆன் சதுக்கமாக அபிவிருத்தியடைந்து வருகின்றது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் விசேட வேலைத்திட்டத்தின் கீழே இந்த அபிவிருத்தி பணிகள்



முன்னெடுக்கப்படுகின்றன.

காத்தான்குடி குட்வின்சந்தி குர்ஆன் சதுக்கமாக மாறுவதற்கான அபிவிருத்திப் பணிகள்; துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இந்த அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்வின் வழிகாட்டலில் காத்தான்குடி நகரசபையினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## நகரசபைக் கட்டிட அடிக்கல் நாட்டு விழா

ஏறாவூர் நகர சபையின் சகல வசதிகளும் கொண்ட நகரசபைக் கட்டிடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த வாரம் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத், ஏறாவூர் நகரபிதா அலிஸாஹிர் மௌலானா, உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு அமைச்சர் பஷீர் சேகுதாவூத் மற்றும் பல முக்கியஸ்தர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

தேசத்திற்கு மகுடம் மற்றும் புறநெகும அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சுமார்



நான்கு கோடி ரூபா செலவில் இக்கட்டிடம் அமைக்கப்படவுள்ளது.

## விழிப்புணர்வு கருத்தரங்கு

மன்னார் நகரில் உள்ள உணவகங்களின் சுகாதார நிலைமையை மேம்படுத்துதல் மற்றும் அதன் தரத்தை உயர்த்துதல் தொடர்பில் உணவகங்களின் உரிமையாளர்களுக்கான விழிர்ப்புணர்வுக் கருத்தரங்கு கடந்த வாரம் நடைபெற்றது.

மன்னார் நகரில் உள்ள உணவங்களில் காணப்படும் சுகாதாரக் குறைபாடுகள், அந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்து உணவகங்களை மேம்படுத்துவது, மக்களுக்கு உணவு வகைகளை எவ்வாறு கையாண்டு பரிமாறுவது என்பது தொடர்பில் உணவகங்களின் உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டன.

மன்னார் நகரசபை மண்டபத்தில் பாவனை அதிகார சபையின் வடமாகாண இணைப்பாளர் ராஜபக்ஷ கே.லயனல் ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் மன்னார் நகரசபையின் தலைவர் சந்தான்பிள்ளை ஞானப்பிரகாசம், உபதலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ், நகரசபை உறுப்பினர் இரட்னசிங்கம் குமரேஸ், மன்னார் மாவட்ட பொதுச்சுகாதார வைத்திய அதிகாரி ஞானசீலன் குணசீலன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## மீள்குடியேற்ற மக்களுக்கு உபகரணங்கள் வழங்கல்

வவுனியா தெற்கு போகஸ்வெள கிராமத்தில் மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு ஒருகோடியே பத்து இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை மீள்குடியேற்ற அமைச்சு வழங்கி வைத்துள்ளது.



இக்கிராமத்திற்கு விஜயம் மேற்கொண்ட மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரகோன் மீள்குடியேறிய மக்கள் தற்காலிக வீடுகளை அமைத்துக் கொள்வதற்காக சீமெந்து, தகரம் உட்பட தேவையான பொருட்களை வழங்கி வைத்துள்ளார்.

அத்துடன் வடமாகாண ஆளுநரின் நிதி, பொதுமக்களால் சேகரிக்கப்பட்ட நிதி என்பவற்றின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட துவிச்சக்கர வண்டிகளும் அமைச்சர் குணரத்ன வீரகோனினால் பயனாளிகளுக்கு வழங்கிவைக்கப்பட்டது.

## உள்ளூராட்சி மகுடம்

கிழக்கு மாகாணசபை ஆரம்பிக்கப்பட்டு முதன்முறையாக உள்ளூராட்சி ஊழியர்களை கௌரவிக்கும் நிகழ்வு மட்டக்களப்பில் நடைபெற்றது. 'உள்ளூராட்சி மகுடம்' என்னும் தலைப்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி ஊழியர்கள் மற்றும் சிறந்த சேவையை வழங்கும் உள்ளூராட்சி சபைகளை



கௌரவிக்கும் வகையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

மட்டக்களப்பு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி சத்தியானந்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ மஜீத் கலந்துகொண்டதுடன் சிறப்பு அதிதியாக முன்னாள் முதலமைச்சரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் கலந்துகொண்டார்.

கௌரவ அதிதிகளாக கிழக்கு மாகாணசபையின் பிரதி தவிசாளரும் கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான எம்.எஸ்.சுபைர், கிழக்கு மாகாணசபை உறுப்பினர் மொகமட் சிப்லி, முன்னாள் மாகாணசபை உறுப்பினர் பூ.பிரசாந்தன், கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மா.உதயகுமார் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றிய காரியாலய ஊழியர்கள், அலுவலக சிற்றூழியர்கள், காவலாளிகள், சாரதிகள், வீதித்தொழிலாளிகள், சுகாதார தொழிலாளிகள் கௌரவிக்கப்பட்டனர்.

ஆறு தொகுதிகளைக் கொண்டதாக நடைபெற்ற இந்த 'உள்ளூராட்சி மகுடம்'என்னும் நிகழ்வில் சிறந்த செயற்பாட்டினை செய்த உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள், செயலாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுகதிர்
Elukathir Weekly
Kandy Road, Karaddypokku, Kilinochchi
elukathirnews@gmail.com
முகநூல்: Elukathirthagaval

## நமது நோக்கு

# தமிழகத்தின் எழுச்சியை பயனுள்ளதாக்கவேண்டும்!

இலங்கை தமிழர் விகாரத்தில் இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் மீண்டுமொரு முறை அனுதாப அலை மேலெழுவதை அண்மைக் காலமாக அவதானிக்கமுடிகின்றது. தமிழகக் கட்சிகள் ஒவ்வொன்றும் தமக்குள் போட்டி போட்டுக்கொண்டு போராட்டங்களை முன்னெடுக்கின்றன. ராஜீவ் காந்தி கொலைக்குப்பின்னர் ஈழத்தமிழர் விவகாரத்தில் எதிர்நிலை கொண்டிருந்த தமிழக காங்கிரஸ் கட்சி கூட இப்போது ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக களத்தில் குதித்திருக்கின்றது.

தமிழக அரசியல் கட்சிகளின் இந்த திடீர் மனமாற்றத்திற்கு காரணம் என்ன என்பது ஒன்றும் இரகசியமானது அல்ல. தத்தமது அரசியல் நலன்களை முன்னிறுத்தியே இந்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன. இந்த விவகாரத்தில் கூட கட்சிகள் தமக்கிடையே ஒன்றிணைய தயாராக இல்லாததிலிருந்து அவர்களின் உண்மை முகத்தை அறிந்து கொள்ளலாம்.

ஈழத்தமிழ் மக்களுக்காக நாங்களே அதிகம் குரல்கொடுத்தோம் என்று உரிமை கொண்டாடி அதன் மூலம் கிடைக்கக்கூடிய வாக்கு வங்கியை இலக்குவைத்தே இந்தப் போராட்டங்கள் நடாத்தப்படுகின்றன.

தமிழகத்தில் என்னதான் போராட்டங்கள் நடந்தாலும் இந்தியா தனது வெளிநாட்டுக் கொள்கையில் மாற்றத்தைக் கொண்டுவரப் போவதில்லை என்பது இவர்களுக்குத் தெரியாததல்ல.

இலங்கையில் யுத்தம் நடந்தபோது அது குறித்த அனைத்துத் தகவல்களும் இந்திய அரசுக்குத் தெரிந்தே இருந்தது என்றும், அதற்கு இந்திய அரசும் உடந்தையாக இருந்தது என்றும் பாரதீய ஜனதா கட்சியின் மூத்த தலைவரும் முன்னாள் இந்திய வெளியுறவு அமைச்சருமான யாஷ்வந்த் சின்ஹா கடந்த வாரம் குற்றம் சாட்டியிருந்தார். ஜெனீவாவில் நடந்துவரும் ஐக்கிய நாடுகள் அவையின் மனித உரிமைகளுக்கான கவுன்சிலில் இலங்கை தொடர்பாக அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத்தின் சொல்லாடல்கள் பூர்த்தியான பின்பு அதைச் சரிபார்த்தே இந்தியா தனது நிலையை எடுக்கும் என்று இந்திய பிரதமர் சொல்லியிருந்தார். இதிலிருந்து ஒரு விடயம் புலனாகிறது. ஒரு பாதியில் இந்திய அரசு இலங்கை அரசுடன் இணைந்தும் மறுபாதியில் ஒரு குறிப்பிட்ட எல்லை வரை அமெரிக்காவோடு இணைந்தும் தனது நலன்களை நிலைநாட்ட முயல்கிறது.

இந்தியாவே அந்தத் தீர்மானத்தை வடிவமைக்க வேண்டும், அந்த தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் மன்றத்தில் நிறைவேற்றுவதில் இந்தியாவே முழு முயற்சி எடுக்கவேண்டும் என்று யாஷ்வந்த் சின்ஹா கோரிக்கை விடுக்கிறார்.

இலங்கை அரசு உருவாக்கிய கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்றும், இந்திய அரசிடம் தொடர்ந்து ஒப்புக்கொண்டபடி பதின்மூன்றாவது அரசியல் சட்டத்திருத்தத்திற்கு அதிகமான அதிகாரப் பரவலாக்கலை இலங்கை அரசு உடனடியாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்றும் சின்ஹா கோரிக்கை விடுக்கின்றார்.

ஆனால் அதற்கு பதிலளித்த இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித், பிற நாடுகளின் உள்விவகாரங்களில் இந்தியா தலையிடாது என்று தெரிவித்துள்ளார்.

அடுத்தவரின் பிரச்சினையில் நாம் எப்போதும் தலையிடுவதில்லை மற்ற நாடுகளின் விவகாரங்களில் தலையிட்டு ஒரு தரகராக செயல்பட இந்தியா விரும்புவதில்லை. பிற நாடுகளின் உள்விவகாரங்களில் இந்தியா எப்போதும் தலையிடாது. ஆலோசனை கேட்காதவர்களுக்கும், பாதுகாப்பான, நல்ல ஆலோசனையை, சரியான நேரத்தில் இந்தியா வழங்கும். இந்தியா இயல்பாக செயற்படவே விரும்புகிறது. எந்தக் காரணமும் இல்லாமல், நாம் ஏதாவது ஓர் அணியில் இணைந்து கொண்டு உரக்கக் குரல் கொடுக்க வேண்டியது அவசியமில்லை. அதே நேரத்தில் மற்றொரு நாடு குறித்து தாக்கிப் பேச வேண்டிய தேவையும் இல்லை என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார். இதிலிருந்து இந்தியாவின் தற்போதைய நிலையை நாம் புரிந்துகொள்ளலாம்.

இலங்கையுடன் நமக்கு நட்புறவு இருக்கிறது. அதே சமயம் நாமும் அவர்களும் அண்டை நாட்டுக்காரர்கள். எனவே அவர்களுக்குக் கோரிக்கை வைக்கவும், அறிவுரை கூறவும், அவர்களைக் கண்டிக்கவும், அவர்களுடன் விவாதிக்கவும் இந்தியாவுக்கு உரிமை இருக்கிறது. அந்த உரிமையை இந்திய அரசு பயன்படுத்தவேண்டும் என்று கூறும் பாரதீய ஜனதாக் கட்சியின் சின்காவுக்கு, பாரதீய ஜனதாக் கட்சி மத்தியில் ஆட்சிக்கு வந்தால் அவரது கூற்றுக்களை நடைமுறைப்படுத்துவீர்களா? என்ற கேள்வியை எழுப்பிப் பார்க்க வேண்டும்! சின்ஹா இந்தக் கூற்றுக்களை தெரிவித்து வாயை மூடுவதற்கு முன்னர் அவர்களது கட்சி வெளியுறவு ஆலோசகர் சேஷாத்திரி அந்தக் கூற்றுகளோடு முரண்படுவதையும் நாம் இங்கு நோக்கலாம்.

இலங்கை இந்தியாவுக்கான முதலீட்டுக்கும், வணிகத்துக்குமான சந்தை. அடுத்து தேசிய இனங்களுக்கான சுயநிர்ணய உரிமையை எற்றுக்கொளவதில் இந்தியாவுக்கு பலசங்கடங்கள் உண்டு என்ற அடிப்படைகளை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். தமிழகத்தில் இப்போது எற்பட்டுள்ள எழுச்சியை சரியான வழியில் திசைதிருப்ப வேண்டிய பொறுப்பு இன்று ஈழத்து தமிழ்த் தலைமைகளிடமே இருக்கின்றது. மத்திய அரசு நிறைவேற்றக்கூடிய விடயம் ஒன்றை முன்னிறுத்தி தமிழகத்தின் எழுச்சியை திசைதிருப்பவேண்டும். இல்லையேல் இந்த எழுச்சி வீணானதாகிவிடும்.

# அமெரிக்க தீர்மானத்தில் கூட்டமைப்புக்கு திருப்தி இல்லை!

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்காவினால் கொண்டு வரப்படும் தீர்மானத்தில் தற்போது இடம் பெற்றுள்ள வாசகங்கள் தமக்குத் திருப்தி அளிக்கவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

ஜெனிவா சென்றுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரனே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் பிபிசி செய்தி சேவைக்கு மேலும் தெரிவித்துள்ளதாவது, இலங்கை தொடர்பான தீர்மானத்தின் வாசகங்கள் இன்னமும் பூரணப்படுததப்படவில்லை. இந்த முறை கொண்டு வரப்படும் தீர்மானம் கடந்த முறை



கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை விட கடுமையானதாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

எனினும், போர்குற்றம் குறித்து சுயாதீன சர்வதேச விசாரணை தேவை என்பதை தாம் கேட்பதாகவும், இறுக்கமான ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட வேண்டும் என்று தாம் விரும்புவதாகவும் அவர் கூறினார்.

அதே நேரம் மனித உரிமைப் பேரவைகளுக்கான அமெரிக்கத் தூதர், இந்த விடயம் தொடர்பாக இலங்கையோடு இணைந்து செயல்பட முடியும் என்று தாம் நம்புவதாகத் தெரிவித்திருந்தார்.

மேலும் போரில் முக்கியப் பங்காற்றிய இலங்கை இராணுவ உயரதிகாரி அமெரிக்க இராணுவப் பல்கலைக் கழகத்தில் பேச அனுமதி அளிக்கப்பட்டுள்ளது அமெரிக்காவின் நிலைப்பாடு குறித்து சந்தேகஙகளைத் தோற்றுவித்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமெரிக்காவை மட்டுமே நம்பி தாம் இருக்க முடியாது என்று தெரிவித்த சுரேஷ் பிரேமசந்திரன் பல்வேறு நாடுகளின் தூதர்களை சந்தித்து தமது நிலைபற்றி விளக்கிக் கூறுவதாகத் தெரிவித்தார்.

# வடக்கு நிலைமைகளை நேரில் அவதானித்த அமெரிக்கா!

இலங்கையின் வட பகுதிக்கு நேரில் சென்ற அமெரிக்க னதரக அரசியல் துறை அலுவலர் ஜேக்கப் ஸ்ரிக்கி, அங்குள்ள மனித உரிமை நிலைமைகள், நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்தல் போன்ற விடங்களில் இன்னும் முன்னேற்றம் காணப்பட வேண்டியிருப்பதாக செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தமது வடபகுதிக்கான பயணம் குறித்து செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட ஜேக்கப் ஸ்ரிக்கி, வடபகுதியின் மனித உரிமை நிலைமைகள் மிகுந்த கவனத்திற்கு உரியதாக இருக்கின்றது என்றும், கொழும்புக்குச் செல்வதற்காக வந்த மக்கள் வவுனியாவில் தடுத்து நிறுத்தப்பட்டிருப்பது ஒரு சம்பவமாக இருந்த போதிலும், இந்த பகுதியின் நிலைமைகளை விளக்குவதற்கானதொரு சிறந்த உதாரணமாக இது அமைந்திருக்கின்றது என்றும் கூறினார்.

இதேபோன்று நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதிலும் இது முக்கிய விடயமாக இருக்கின்றது என்று கூறிய ஜேக்கப் ஸ்ரிக்கி, சுதந்திரமான மக்கள் நடமாட்டம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்கிற பரிந்துரைக்கு மாற்றாக அந்த மக்கள் தடுத்து நிறுத்தப்பட்டமை மிகவும் கரிசனைக்குரியது என்றும் கவலை வெளியிட்டார். யாழ்ப்பாணத் தீவகங்களில் ஒன்றாகிய நெடுந்தீவு மற்றும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, ஆகிய மாவட்டங்களின் பல இடங்களுக்கும் நேரில் சென்ற அவர், கடந்த வாரம் வியாழனன்று மாலை வவுனியாவுக்கு வந்தார். வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், மன்னார் பிரஜைகள் குழுவினர் மற்றும் சிவில் சமூகத்தின் முக்கியஸ்தர்களையும் அவர் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பின் போது வடபகுதி மக்களின் எதிர்பார்ப்புக்கள், அவர்களின் துயரங்கள் பற்றி அமெரிக்க அரசியல் துறை அலுவலரிடம் எடுத்துக் கூறியதாகத் தெரிவித்த அருட்தந்தை ஜெபமாலை, காணாமல் போனவர்கள் தொடர்பிலான நிலைமைகள் குறித்து தங்களிடம் அவர் விவரமாக கேட்டறிந்து கொண்டதாகக் குறிப்பிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ENGLISH

# DIASPORA LTTE ACTIVISTS POSING AS HUMAN RIGHTS CHAMPIONS

**Sri Lanka is very much in the news these days as events unfold at the United Nations Human Rights Council (UNHRC) in Geneva. The focus is on the final phase of the war between the Armed forces of Sri Lanka and the Liberation Tigers of Tamil Eelam (LTTE). The avowed objective is eliciting the truth about what had exactly happened in that critical period.**

The spotlight is primarily on the Sri Lankan government headed by President Mahinda Rajapaksa being held accountable over its alleged acts of commission and omission. At the forefront of this widespread campaign are members of the Global Tamil Diaspora and their organisations. In a remarkable transformation many tiger-backed or pro-tiger Diaspora organisations have turned into champions of human rights.

The defeat of the LTTE and destruction of its hierarchy has been somewhat a blessing in disguise for these outfits. The eclipse of the LTTE in Sri Lanka has resulted in a situation where Tamil Diaspora activists are taking to human rights in a big way. They are able to demand action and sanctions against the Sri Lankan regime without any care or concern because the LTTE is no more.

When independent international investigations are called for lip service is paid to the need to delve into the conduct of "both parties". In the absence of a tangible LTTE leadership that can be targeted such references are mere abstract notions rather than concrete realities.

The phenomenon of Tamil Diaspora leaders, representatives and activists being re-born as Independent "avatars" seeking justice and accountability is all the more galling when the recent past is recalled. The role and conduct of the LTTE and pro-LTTE elements within the Tamil Diaspora has played an extremely negative role in plunging the community into disaster. Yet these persons are now able to project themselves in a new image without feeling pangs of guilt or expressing any remorse for the past.

**" During the latter stages of the war when the army advanced and tigers retreated, the shrinkage of the LTTE sphere of control in the island resulted in the reduction of the Tigers' revenue base also. Thus, the Tigers who had at one time ridiculed the Diaspora were compelled to rely more and more on funds raised from it "**

These elements have learnt from previous blunders and are now re-configuring themselves in seemingly positive formations. The Diaspora that was unable to prevent the LTTE military defeat in Mullivaaikkal is now trying to extract revenge by advocating International action against Sri Lanka.

## INSIGHT

The role of the Diaspora was most despicable in the final phase of the war. Yet the same elements in fresh garb have assumed new roles. I have in the past written extensively about the LTTE and pro-LTTE activities within and outside Sri Lanka but it would be pertinent to draw on those writings to provide an insight into current develop-ments.

**" A former LTTE spokesperson told a German journalist that the expatriates were economic refugees. The LTTE "poet laureate" Puthuvai. Rathinadurai in a poem called them dogs "**

In 1989, I attended a conference organised by the pro-Tiger publication Tamil Voice International in London. Among the participants were politicians, journalists and bureaucrats from India such as P. Upendra, S. Unnikrishnan, Aladi Aruna, N.V.N. Somu, K. Veeramani, A.P. Venkateswaran and Samantha Datta Ray.

Liberation Tigers of Tamil Eelam (LTTE) leader Velupillai Prabakaran sent a felicitatory message to the conference. The delegates, consisting mainly of members of the worldwide Sri Lankan Tamil diaspora, were shocked by a reference in that message.



Prabakaran described the Diaspora as "tholaintha santhathi" or lost generation. The Diaspora representatives were seething with anger but were unable or unwilling to challenge the Tiger supremo's poor opinion of them.

Despite members of the Diaspora playing an important role in the affairs of the LTTE, that organisation regarded those who had "left the homeland" (pulam peyarnthor) generally with contempt. The LTTE described them as people who had deserted "Tamil Eelam" at a critical juncture. A former LTTE spokesperson told a German journalist that the expatriates were economic refugees. The LTTE "Poet Laureate" Puthuvai. Rathinadurai in a poem called them dogs.

That opinion began to change as more and more Tamils left Sri Lanka as refugees to swell the numbers of a global Diaspora. Even as contributions to the LTTE decreased at home, the funds from abroad increased.

The LTTE fund raising mechanism operated abroad generally in five modes.

## FUND RAISING

The first was the mode known as "SO" or Standing Order. This is a method by which committed supporters of the LTTE make arrangements through their banks for a



monthly sum to be sent directly to the front organisation of the LTTE in his or her country. This is a comparatively small sum but has regularity guaranteed. There is no coercion in this because those who contribute are genuine supporters who do so willingly. The funds raised through this method are used for the running of LTTE branches/fronts in each country.

The second was the annual general collection. This is a collection drive executed on an on-going basis throughout the years. In this, Tamils regardless of whether they are active supporters or not are targeted. Pledges are extracted for certain sums of money to be paid in a few installments. Force, intimidation and coercion were used frequently in these collections to make people pay up or increase the sums of money promised. An easy way of frightening Tamils was by threatening harm to family members living in Sri Lanka. A large number of people paid up willingly too.

Earlier tiger collectors used to work on a voluntary basis but later the collectors were paid a commission depending on the amount they collected. This incentive resulted in a massive increase in the fundraising. At the same time enthusiastic collectors engaged in violence and intimidation to increase the amount collected as their own income through commissions too increased proportionately.

The money raised through these collections was spent in three ways. A substantial portion of it was sent to the LTTE headquarters in the Wanni for maintenance and upkeep of the movement. Another portion was sent to procurement agents abroad for arms and ammunition purchases. A third and perhaps the largest portion was used for investment and setting up businesses abroad.

The third form of fund raising was the one known as "Special collection". This is actually a kind of credit or loan arrangement used exclusively to facilitate the acquisition of arms. This concept was pioneered by Selvarasah Pathmanathan alias KP decades ago when he was in charge of the LTTE overseas procurement or arms purchases. What had happened then was that huge amounts of money were required at short notice to make arms purchases. KP who was then in overall charge of overseas LTTE administration and fund-raising hit upon the idea of a special collection to raise funds at short notice.

**" That opinion began to change as more and more Tamils left Sri Lanka as refugees to swell the numbers of a global Diaspora. Even as contributions to the LTTE decreased at home, the funds from abroad increased "**

## SPECIAL COLLECTION

A special collection was one where trusted, diehard supporters of the LTTE in each country particularly those whose credit was good with banks, would obtain loans in their names and then transfer the money to the local LTTE agent or front. In most instances they would use their line of credit or put up their houses as collateral to raise loans. By this method a huge amount of money would be secured rapidly and utilised for arms purchases. The interest due to the banks for these loans would be given by the local LTTE branch through the funds obtained through Standing Orders. While the interest was paid off regularly in this way the principal was also paid off gradually through the money raised by the general collection. KP made sure that all the loans procured by tiger supporters in their personal capacity for a special collection was paid off in due course without default. His successors too followed suit. Thus the special collection idea caught on among LTTE supporters and exceedingly large amounts were raised and paid off without mishap. A special collection was usually undertaken once in eighteen months.

Apart from these, there were two other broad methods to generate funds. One was by staging performances and shows and by selling stuff like calendars, videos, DVD's, Audio CD's, books, magazines, newspapers, souvenirs etc. Money was also raised by staging Black Tigers' day and great heroes' day celebrations too. On the one hand people were charged large amounts for admission while on the other people were also asked to make donations to cover the expenses.

Finally there were the investments in commercial concerns. The LTTE justified its entry into pure commercial pursuits by stating that avenues of regular income should be ensured to sustain the armed struggle at all times. Since reliance on contributions alone could prove unsteady in the long run the tigers needed to set up commercial enterprises on a wide-ranging basis, it was argued.

During the latter stages of the war when the army advanced and tigers retreated, the shrinkage of the LTTE sphere of control in the island resulted in the reduction of the Tigers' revenue base too. Thus, the Tigers who had at one time ridiculed the Diaspora were compelled to rely more and more on funds raised from it.

## ENDGAME

With the LTTE getting gradually boxed into a tiny strip of coastal territory in the Assistant Government Agent division of Karaithuraipattu in the Mullaithivu district, the endgame for the Tigers began. The fate of Prabakaran itself became a big question mark. Desperate, the LTTE turned to the Diaspora. The wheel had turned full circle. The LTTE claiming to liberate the Tamil people now started looking to the "pulam peyarnthor" to extricate itself from the

**DBS Jeyaraj**

morass it had sunk into.

It was felt that only high-level pressure exerted by the international community could compel Sri Lankan President Mahinda Rajapaksa to call off the offensive and enter into negotiations with the LTTE. The Tigers gasping for breath, needed oxygen. For this task, the LTTE hierarchy thought that the Tamil Diaspora would be the trump card. Sections of the Diaspora in Western countries would mount pressure on their respective governments and make them pressurise Colombo. The Tiger lobby in Tamil Nadu was expected to do the same in India.

An international campaign focusing on the plight of Tamil civilians in Tiger-controlled territory was to be orchestrated. Charges of genocide were raised. The objective was to use the civilians' plight to pressure the international community into fulfilling its responsibility to protect civilians. The Tigers who were known for grave political miscalculations, were way off the mark in this too.

While being sympathetic to the tragedy, the international community had a different take on its causes and possible remedy. The unwritten consensus was that the LTTE was primarily responsible for the Tamils' plight. The bulk of the Tamil people were being held against their will by the Tigers. As such the crisis amounted to a "hostage" situation. The best option, therefore, was for the LTTE to release the civilian hostages and discuss terms of surrender.

(contineu next week.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவை நம்ப முடியாது: சுரேஸ் பிரேமச்சந்திரனுக்கு 35 வருடம் தேவைப்பட்டிருக்கிறது!

**மட்டுநகரிலிருந்து எழுகதிரோன்**

★ஐ.நா.மனித உரிமை பேரவையின் 22ஆவது கூட்ட தொடரில் சமர்ப்பிப்பதற்காக இலங்கை தொடர்பாக அமெரிக்கா வெளியிட்ட நகல் தொடர்பான உப குழு கூட்டம் மார்ச் 08 ம் திகதியன்று நடைபெற்றது


★அமெரிக்கா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் உறுப்பு நாடுகளும் மனித உரிமை அமைப்புக்களும் கலந்து கொண்டன. ஆனால் உறுப்பு நாடுகளுக்கு மட்டுமே கருத்து கூற சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. ஆரம்பத்திலேயே இந்த பிரேரணையை தாம் நிராகரிப்பதாகவும், நீதியற்ற பிரேரணை என சிறிலங்கா தூதுவர் ஆரிய சிங்க குறிப்பிட்டதுடன் கூட்டம் ஆரம்பமாகி சிறிது நேரத்திலேயே எழுந்து சென்றுவிட்டார்.

★ இந்தியா இக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. சிறிலங்காவுக்கு ஆதரவான சீனா, ரஷ்யா, பாகிஸ்தான், ஈரான், கியூபா, வெனிசுவெல உட்பட அனைத்து நாடுகளும் கலந்து கொண்டன. ஆசிய ஆபிரிக்க நாடுகளும் சில தென்அமெரிக்க நாடுகளும் சிறிலங்காவுக்கு ஆதரவாக பேசின. இந்த பிரேரணை அவசியமற்றது என கூறின.

★ முக்கியமாக இந்த விடயத்தில் சீனா, ரஷ்யா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் இந்த பிரேரணை கொண்டுவந்தால் அதனை எதிர்க்க போவதாக கூறின. கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகள் இந்த பிரேரணை கொண்டு வரப்படுவதை வரவேற்றன.

★ இந்த கூட்டம் முடிந்த பின்னர் அதில் கலந்து கொண்ட கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களிடம் அப் பிரேரணை பற்றிய அபிப்பிராயத்தை கேட்ட போது "அமெரிக்கா கொண்டுவரும் இப்பிரேரணையால் தமிழர்களுக்கு நிரந்தர தீர்வோ நீதியோ கிடைக்கும் என தான் எதிர்பார்க்கவில்லை" என கூறினார்.

இந்த தீர்மானத்தின் நகல் வெளியி டப்படுவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னரேயே தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் "அமெரிக்காவை நாம் முழுமையாக நம்ப முடியாது" என்று ஜெனிவாவில் நின்று கொண்டு கருத்து கருத்து தெரிவித்தார். அமெரிக்காவை நாம் முடியாது என்பதை புரிந்து கொள்ள பத்மநாபாவின் பாசறையில் வளர்ந்த சுரேஸ் பிரேமச்சந்திரனுக்கு சுமார் 35 வருடகால அரசியல் அனுபவமும் ஜெனிவாவின் மைனஸ் ஐந்து பாகை குளிரும் தேவைப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே எமக்கு கிடைத்த அரசியல் தலைவர்கள் போல் வேறு எந்த ஒரு இனத்துக்கும் தலைவர்கள் கிடைத்து விடகூடாது என்று எல்லாம் வல்ல இறைவனை நாமெல்லோரும் வேண்டிக்கொள்ள வேண்டும். உலகில் விடுதலைக்காக குரல் எழுப்பும் எந்த ஒரு இனமும் அமெரிக்காவை நேச நாடக கருதியதாக வரலாறு கிடையாது. உலகமெங்கும் ராணுவத்தை அனுப்பி மனித உரிமை மீறல்களில் உலக சாம்பியனாக திகழும் அமெரிக்க ஏகாதிபத்தியதிடம் மானிட நீதிகோரும் ஒரே இனம் இப்பூவுலகில் தமிழர்களாக மட்டும் தான் இருக்க முடியும். அமெரிக்கா தலையீடு செய்த எந்த நாட்டில் அமைதி வந்திருக்கிறது? ஆப்கானிஸ்தானில் அமைதி வந்திருக்கிறதா? ஈராக்கில் அமைதி வந்திருக்கிறதா? இல்லை அமெரிக்க தலையீடு செய்த ஆபிரிக்க நாடுகளில் ஒன்றிலாவது அமைதி திரும்பியிருக்கிறதா? இல்லையே. அமெரிக்கா எங்கு கால் பதிக்கிறதோ அந்தமண்ணுக்கு ஐயோ கேடு என்பது மட்டுமே உலக நாடுகளின் அனுபவமாக இருந்து வந்திருக்கிறது.



உலக நாடுகளின் ஸ்திர தன்மையை குலைப்பதும் ஏழ்மையையும் இல்லாமையையும் அதிகரித்து அரசியல் வாதிகளிடையே அதிகார போட்டியை உருவாக்குவது, யுத்தங்களை உருவாக்கி தமது ஆயுத விற்பனையை ஒரு புறம் பெருக்கி கொள்வதுடன் மறுபுறம் நோர்வே போன்ற அமைதி, முகங்களின் துணை கொண்டு கட்டை பஞ்சாயத்துக்காரனாக அந்தந்த நாடுகளில் மனித உரிமை வேசங்களின் உதவியுடன் களமிறங்குவது, அங்கிருந்து சகல வளங்களையும் சூறையாடுவதுமே இந்த ஐரோப்பிய, அமெரிக்க ஏகாதிபத்தியங்களின் அன்றாட வேலையாகும்.

இந்த உண்மைகளை கூட கருத்தில் எடுக்காது அமெரிக்கா அமெரிக்கா என்று அலைவதை தமிழ் தலைவர்கள் இனியாவது நிறுத்திக்கொள்ள வேண்டும். சியோனிச இஸ்ரவேலை முன்மாதிரியாகவும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை வழிகாட் டியாகவும் கொண்டியங்கிய புலிகளின் பாசிச அரசியல் சிந்தனையை கூட்டமைப்பு உடனடியாக கைவிட வேண்டும். இறுதி யுத்தத்தில் நடந்து போன அழிவுகள் விரும்பத்த காதவைதான். அதை வைத்து கொண்டு இன்னுமின்னும் அரசுடன் முரண்பட்டுக் கொண்டே இருப்பதனால் என்ன பயன் என்பதை இனியாவது சிந்திக்க வேண்டும். பழிவாங்கும் குணத்தை விடுத்து அழிந்து போன மக்களுக்காக பொறுப்பு சொல்லும் கடமை அரசுக்கு உண்டு என்பதை துடுப்பாக முன்னிறுத்தி, இருக்கும் மக்களை வாழவைக்கும் கைங்கரியத்தில் நமது தலைமைகள் செயலாற்ற முன்வர வேண்டும். யுத்தம் முடிந்து 4வருடங்கள் ஆக போகின்றன. இன்றுவரை தமிழ் மக்களுக்கு இதுதான் தேவை என்று ஒரு தீர்வு திட்டத்தை வரைந்து முன்வைக்க தகுதியின்றியே கூட்டமைப்பு காலம் தள்ளுகிறது. அனைத்து சிறுபான்மை கட்சிகளையும் ஒருமித்து செயற்பட செய்ய ஒரு துளி கூட கூட்டமைப்பு முனைப்பு காட்ட வில்லை. அதுதான் இல்லா விடினும் வடக்கு, கிழக்கில் இயங்கும் தமிழ் கட்சிகளை என்றாலும் ஒரு பொது வேலைத் திட்டத்தின் கீழ் ஒன்றிணைப்பதில் சிரத்தை காட்ட கூட்டமைப்புக்கு அக்கறையில்லை. கேவலம் தேர்தலில் வென்று விடுவதற்காக கூட்டமைப்புடன் அவ்வப்போது கை கோர்க்கும் கட்சிகளைக்கூட ஒருமித்து தமிழ் தேசிய கூட்டமைப்பை ஒரு கட்சியாக பதிவு செய்வதில் தொடங்கிய இழுபறி பதவி ஆசைகளை கடந்து இன்னும் முடிவுக்கு வந்த பாடில்லை. இந்த லட்சணத்தில் இவர்கள் தமிழ் மக்களுக்கு தீர்வுக்கு வழி காட்டுவார்கள் என்று மக்கள் காத்து கிடக்கின்றார்கள். மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்கியவனின் கதையை விட கூட்டமைப்பை நம்பிய தமிழ் மக்களின் கதை பரிதாபமானது என்பதே உண்மை.

இவை அனைத்தையும் விட கூட்ட மைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் அரசியல் சூனியத்தின் வெளிப்பாடுகள் ஆகும். "இம்முறை தப்பினாலும் அடுத்த வருடம் இலங்கை தப்பிக்க முடியாதாம்". இப்படியே ஒவ்வொரு வருடமும் ஜெனிவாவை காட்டிக் காட்டி தமிழ் நாட்டையும் தமிழ் மக்களையும் சூடாக்கி அவ்வப்போது வருகின்ற தேர்தல்களில் தமிழ்மக்களின் உணர்வுகளை வாக்குகளாக வென்று விடுகின்ற போக்கணம் கேட்ட இராஜதந்திரம் சம்பந்தருடையது. இவர்களுக்கு உண்மையிலேயே தமிழ் மக்கள் மீது அக்கறை இருந்திருந்தால் யுத்தம் அழிவுகளையே தரும் என்பதை தெரிந்திருந்தும் அதை ஊக்குவித்த புகலிட தமிழர்களின் "ஆணையிடு தலைவா" என்கின்ற உசுப்பேத்தல்களை கேட்க வேண்டாம் என்று புலிகளுக்கு புத்தி சொல்லியிருக்க வேண்டும். அல்லது யுத்தம் கிளிநொச்சியை தாண்டியவுடன் மக்களை பணய கைதிகளாக பிடித்த புலிகளின் வெறித்தனத்தை இவ்வுலகுக்கு அம்பலப் படுத்தியிருக்க வேண்டும். இல்லை இருதரப்பாரும் யுத்தத்தை நிறுத்தி அப்பாவி மக்களின் உயிர்களை காப்பாற்றுங்கள் என்று யுத்தம் உச்சத்தில் இருந்த போது தம் பதவிகளை துறந்திருக்க வேண்டும். இதில் எதையுமே செய்யாது கள்ள மவுனம் காத்துவிட்டு இன்று கண்கெட்ட பின்பு சூரிய நமஸ்காரம் செய்ய புறப்பட்டிருப்பது மக்களை வழிநடத்தும் தலைமைகளின் இலட்சணமல்ல.

என்னதான் நடந்தாலும் இந்த பத்தி வெளிவருகின்ற வேளையில் ஜெனிவாவில் கடந்த வருடம் போலவே சர்வதேச விசாரணையோ யுத்த குற்றசாட்டுகளோ இடம்பெற்றிருக்க மாட்டாது என்பது நிச்சயம். இலங்கை அரசு உருவாக்கிய கற்றுகொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைகுழுவின் சிபார்சுகளை முழுமையாக அமுல்படுத்துமாறு கேட்டுகொள்ளுகின்ற அல்லது இலங்கையும் சேர்ந்து ஒப்பு கொள்ளுகின்ற கூட்டறிக்கை ஒன்று மட்டுமே வெளிவந்திருக்க முடியும். தொடர்ந்து அடுத்தமுறையும் நடக்கவிருக்கும் வீணாண இந்த போலி நாடகங்களுக்காக கூட்டமைப்பு இன்னு மொரு முறை தன்னை தயார் படுத்த தொடங்கும் அது இடையில் வரப்போகும் வடமாகாண சபை தேர்தலுக்கு வாய்ப்பாக இருக்கும் என்பதனால். பாவம் எமதுமக்கள் என்பதை தவிர என்னால் ஒன்றும் சொல்ல முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரிடையாக இருந்தாலும் இதுதான் உண்மை. சிறிலங்காவிலுள்ள தமிழர்கள் விடயமாக முழு உலகமுமே ஒருவிதத்தில் போராட்டம் நடத்தும்போது, தமிழர்களின் முன்னணி அரசியல் அமைப்பான தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனக்குள்ளே சண்டை போடுவதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது. அல்லது அப்படித் தோன்றுகிறது. இனப்பிரச்சினை மற்றும் அதன் சகல வெளிப்படுத்தல்களும் அவர்களது கைகளை விட்டுப் போய் விட்டது, அதனால் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு அவர்களின் வழக்கமான உள்ளகக் கோரிக்கையான தேசிய தேர்தல் ஆணைக்குழுவில் ரி.என்.ஏ யினை ஒரு தனியான அரசியல் கட்சியாகப் பதிவுசெய்ய வேண்டும் என்கிற கோரிக்கையை திருப்பி எழுப்புவதை தவிர, வேறுவிடயம் எதுவும் கைவசம் இல்லை போலத் தெரிகிறது.

சிறிலங்காவிலுள்ள தமிழ் ஊடகங்களின் தகவல்களின்படி, திரும்பவும் யுத்தத்துக்கு பின்னான கோரிக்கையாக, ரி.என்.ஏ யில் உள்ள இலங்கை தமிழரசுக் கட்சியை (ஐ.ரி.ஏ.கே) சாராத நான்கு கட்சிகளும் ரி.என்.ஏக்குள் உள்ளடக்கப்பட்ட ஒரு

தமிழரசுக் கட்சி பின்பற்றும் காந்தீய வழியினைக் காட்டிலும் எல்.ரி.ரி.ஈ யின் தத்துவங்களிலும் மற்றும் கொள்கை களிலும் அதிகம் பற்றுள்ளவர்களாக உள்ளனர். ஒரு காலத்தில் போராளியாக இருந்தவர்களான, தமிழரசுக் கட்சியினை சாராத ரி.என்.ஏ. பங்காளர்களர்களின் பேச்சுக்களிலிருந்து கிரகித்துக் கொள்ளக் கூடியது, இந்த மாதிரியான புலம்பெயர் பேச்சுக்கள்தான் மிதவாதத்தை காட்டிலும் கட்சியிலும் மற்றும் சமூகத்திலும் அதிகம் மேலோங்கி நிற்கிறது என்று. அவர்களின் எண்ணிக்கை பெரிதுபடுத்தக் கூடிய அளவுக்கு இல்லை, ஆனால் சில்லுகள் கீழிறங்கும்போது, மிதவாத போக்குள்ள வர்களுக்கு விட்டுக் கொடுக்க வேண்டி யதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கும். அல்லது அனுபவங்கள் அப்படி இருந்தால் உணர்வுகளும் அப்படியே இருக்கும்.

ரி.என்.ஏ. யின் சங்கடங்களை கடவுள் அரசாங்கத்துக்கு அனுப்பி வைத்திருக்கிறார் அல்லது அப்படித் தோன்றுகிறது. அதாவது அரசாங்கம், ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் எல்.எல்.ஆர்.சி. அறிக்கையின் ஆவியை வெளியே தள்ள முயற்சிப்பதை எதிர்ப்பதற்கு ஒரு குரல் குறைவாக உள்ளது. கடந்த வருடம் அது

**உலகமே தமிழர்களின் பிரச்சினைகளுக்காக போராட்டம் நடத்தும்போது தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் இருக்கும் கட்சிகள் தம்முள் போராட்டம் நடத்துகின்றன.**

அரசாங்கம் ஜெனிவா முன்னிலையில் இன்னும் கூட இலகுவாக மூச்சுவிட முடியும் ஏனெனில் அங்கு பெரிதாக ஒன்றும் நடக்கப் போவதில்லை, அல்லது பெரிதாக எதையும் இழக்கப்போவதில்லை. உள்நாட்டின் முன்னிலையிலும் இதே விடயம்தான். நீண்ட காலமாக ஒழுக்க முறை தவறியதாகவும் மற்றும் ரி.என்.ஏ. பங்காளிகளைக் காட்டிலும் இன்னும் அதிகம் பிளவுபட்ட நிலையிலுள்ள ஐக்கிய தேசிய கட்சியினால் தற்போது மகிந்த ராஜபக்ஸ தலைமையிலுள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சி - பொதுசன ஐக்கிய முன்னணி கூட்டணிக்கு எதிராக தேர்தல் சவால் விடுவதற்கு ஒரு வழியுமில்லை.

வினோதமான முறையில் தரப்பட்டுள்ள சிறிலங்காவின் தேர்தல் அரசியல் தரவு

அப்பால் அவரை முன்னேற விடவில்லை. 90களின் மத்தியில் ஆயுதப் படைகளால் யாழ்ப்பாண நகரத்திலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட எல்.ரி.ரி.ஈ.யினால் திரும்பவும் அங்கு போவதைப்பற்றி சிந்திக்கக்கூட சாத்தியமற்ற ஒரு நிலை உருவானது, இது ஒப்புமையான ஆண்கள், பொருட்கள் மற்றும் முறைகள் என்பனவற்றைப் பற்றிய ஒரு கதை மட்டுமல்ல - (அல்லது, எல்.ரி.ரி.ஈ.யின் கவலைகள், தமிழர் சமூகத்தின் கலாச்சார தலைநகர் என அழைக்கப்படும் யாழ் நகரில் வாழும் தமிழ் பொதுமக்களின் பாதுகாப்பு பற்றியதாக இருந்ததும் ஒரு காரணமா.

தற்போதைய காலகட்டத்தில் பாதிக்கப் பட்ட சில பங்காளர்கள், ரி.என்.ஏ. பல வழிகளில் மூடி மறைக்க விரும்பினாலும்

# தனக்குள்ளே சண்டை போடும் கூட்டமைப்பு



அரசியல் அடையாளத்தை கோருகின்றன. எனினும் ஐ.ரி.ஏ.கே எனப்படும் இலங்கை தமிழரசுக் கட்சிக்கு - (சர்ச்சைக்குரியதாக அதனை ஆங்கிலத்தில் பெடரல் கட்சி என அதன் நிறுவனரான காலம் சென்ற எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டு ஏனையவர்களாலும் அப்படியே பின்பற்றப்பட்டு வந்துள்ளது) - அது எதுவும் தேவையில்லை. அந்தக் கட்சியின் தேர்தல் அடையாளமாகிய வீடு சின்னத்தைத்தான், ரி.என்.ஏ பின்பற்றி வருகிறது, அதனால் அதன் ஆதிக்க அடையாளத்தை எந்த வகையிலும் விட்டுக்கொடுக்கவோ அல்லது நீர்த்துப் போகச் செய்யவோ அது விரும்பவில்லை. அதேபோல ஒன்றில் அதன் தலைமைப் பொறுப்பு அல்லது அதன் பணி நிலை அந்தஸ்து ஆகிய எதனையும் இப்போதோ அல்லது எப்போதுமே விட்டுக்கொடுக்கவும் அது தயாரில்லை.

இலங்கை தமிழரசுக் கட்சியை சேராத பிரிவினர் குறிப்பாக நாட்டிற்கு வெளியில் உரத்து சத்தம் இடுவதால், இது நாட்டின் தமிழ் அரசியலில் பல பின் விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. தமிழ் புலம் பெயர் சமூகத்திலுள்ள சில கூறுகள், இலங்கை

தோல்வியில் முடிவடைந்தது. மற்றும் இந்த வருடம் ஆரம்பத்திலேயே எதிர்ப்புகள் மிக அதிக அளவில் அதைச்சுற்றி நிறைந்து ள்ளன. கடந்த சுற்றில் நடைபெற்ற தைப்போல, இந்த புதிய அமெரிக்க பிரேரணையும், சிறிலங்காவை அதன் சொந்த தயாரிப்பான எல்.எல்.ஆர்.சியை சுற்றியிழுப்பதாக இருப்பதால், இந்தியா வின் நிலைப்பாடு கூடக்குறைய தெளிவாக விளக்கப் பட்டுள்ளது, அதற்காக இந்தியா மீது பழி சொல்லத் தேவை யில்லை.

ஏழ்மையிலிருந்து அல்ல பயங்கரவாத த்திலிருந்துதான் விடுதலை வேண்டும்.

சிங்கள தேசியவாதிகள் நாட்டுக்கு திரும்பியவர்களைப் பற்றி கேட்க விரும்பும் கதை அல்ல இது. அது மேலும் அரசாங்கம் நாட்டிலுள்ள பெரிய தேர்தல் தொகுதியில் சுற்றி சுழன்று வரக்கூடிய கதையும் அல்ல. முதலில் கூறியதற்கு யுத்த வெற்றி, ராஜதந்திர வெற்றிகளை ஒவ்வொரு சமயத்திலும் மற்றும் ஒவ்வொரு திருப்பத்திலும் தொடர்ந்து செல்ல வேண்டியுள்ளது. பின்னையதற்கு, யுத்த வெற்றி ஏற்கனவே கடந்த காலத்தில் உள்ள ஒன்றாகும். அவர்கள் எல்.ரி.ரி.ஈ. யின் பயங்கரவாதத்திலிருந்து சுதந்திரம் பெற்றுவிட்டார்கள். அது தக்க வைக்கப்பட வேண்டும். அவர்களுக்கு இப்போது வறுமையிலிருந்து சுதந்திரம் வேண்டும். வறுமைதான் இப்போது தங்குவதற்காக வந்துள்ளது, சுதந்திரம் அல்ல.

இந்தப் பின்னணியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ தலைமையேற்றுள்ள அரசாங்கம், விரோதமான பெரும்பான்மையான சிங்கள அரசியலுக்குள், பாரம்பரியமான ஐதேக, ரி.என்.ஏ. மற்றும் ஏனைய கட்சிகளின் புரவலர்களுடனும், அவர்கள் வாக்குகளை பங்கிடுவதில் பெரியளவு சேர்க்கையை ஏற்படுத்தா விட்டாலும் கூட, அவர்களுடனும் கூட்டணி ஏற்படுத்துவதை பற்றி சிந்தித்துப் பார்க்கவேண்டும். இப்போது

களின்படி, கடந்த காலங்களில் தேர்தல் போர்களில் எதிர்க்கட்சிகள் அதிகம் வெற்றி பெறுவதைக் காட்டிலும், ஆளும் பங்காளிக் கட்சிகள் பெரும்பாலும் எதிர்ப்பு அலைகளை பெரிய அளவில் இழந்துள்ளன. இது ஒரு காத்திருப்பு விளையாட்டு, அதில் மக்கள் அரசாங்கத்தை விழுத்துவதற்கு தயாராக வாக்களிக்க உள்ள நாளில் எதிர்க்கட்சி அல்லது அதன் தலைவர், அங்கு இருக்கவேண்டும். ஐதேக தன்னை ஏன் உழைக்காத நிலையில் ஆனால் தன்னை இன்னமும் எப்படி உயிரோடு வைத்துள்ளது என்பதையும் இது விளக்குகிறது.

நம்பிக்கையான வெற்றியாளராக இருந்த முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 2005ல் நடந்த ஜனாதிபதிப் போட்டியில் எதிர் வேட்பாளரான மகிந்த ராஜபக்ஸ

**என்.சத்தியமூர்த்தி**

விடம் தோற்றுப் போனதை பார்த்தும் கேட்டும் மிகச் சுருக்கமாக அறிந்து கொள்ளலாம். 2010ல் நடந்த போருக்குப் பின்னான தேர்தலில் போர் வீரரான சரத் பொன்சேகாவை புரிந்து கொள்ளாததும் மற்றும் பாராட்டத் தவறியதும் கூட ஒரு அரசியல்பாடம்தான்.

கடந்த காலங்களில் சாதி, மதம், உயர்வு மற்றும் தாழ்வு அடிப்படையிலான, உப இன வரிசைகளில் சமூகத்தை பிரித்து ரி.என்.ஏ. விளையாடியதும் ஒரு பொழுது போக்கு விளையாட்டுத்தான். பெரும்பான்மையான சிங்கள பௌத்த சமூகமும் இந்த பிரிவினையிலிருந்து வித்தியாசப் படவில்லை, ஆனால் முன்னவர்கள் தாங்கள் இரகசியமாக அடையவிரும்பிய சொகுசு வாழ்கைக்யை பெற முடியாதவர்களானார்கள். இது பிரபாகரன் தனது இரும்புக் கரங்களால் அடக்க முடியாமல் தோல்வியுற்ற ஒரு பகுதியாகும், அவர் அதற்கு முயற்சி செய்யாமல் இருக்கவில்லை. ஆனால் அவருடைய தலைமையிடத்தில் திணிக்கப்பட்ட இயல்பான வரம்புகள், ஒரு குறிக்கப்பட்ட புள்ளிக்கு

கூட, முன்னாள் போராளிகள் மற்றும் தங்களை நிரந்தரமான மிதவாதிகளாக சொல்லிக் கொள்பவர்கள் ஆகிய இரு பிரிவினர்கள் இடையே சில பிளவுகள் இருப்பதைக் கண்கூடாகக் காண்கிறார்கள். போருக்கு முந்திய காலத்தில் மறந்து விட்ட நாட்கள் மீண்டும் நினைவுக்கு வருகின்றன.

உள்நாட்டிலிருந்து சர்வதேசத்துக்கு, மற்றும் திரும்பவும் அதே இடத்துக்கு சிறிலங்கா அரசாங்கம் இந்த ஒரு விஷயத்தில் அவதானமான அக்கறை கொண்டிருக்கலாம் - இப்போதும், மற்றும் எப்போதும், சிங்கள - பௌத்த வகைகளின், இன - தேசியவாதத்தை அடிப்படையாக கொண்ட சுதந்திரமான அரசியல் விவாதங்களை, அதிகாரத்தில் இருந்தாலும் அல்லது வெளியில் இருந்தாலும்,அரசியல் வகுப்பினரின் தேர்தல் அக்கறைகளைக் காட்டிலும் வித்தியாசமானதாக, பாதுகாப்பு பற்றிய அரசின் கவலைகள் யதார்த்த மானவை. இந்த அக்கறைகள் எப்படி யாயினும் மற்றொரு காலகட்டத்துக்கு சொந்த மானவை - குறிப்பாக அவர்களின் கருத்தாக்கங்கள், வெளிப்பாடுகள், மற்றும் அவற்றை போன்றவற்றை தவிர்ப்பதற்கான பிரிவுகள் போன்றவற்றில். இந்த தகவல் தொழில்நுட்ப யுகத்தில் ஆயுதங்கள் மட்டும் கணணி மயமாக்கப் பட்டிருக்கவில்லை. சிந்தனை செயல் முறைகள் கூடத்தான் அவ்வாறு ஆக்கப்பட்டுள்ளன. அதேபோல செயல் முறைகள் மற்றும் பரவலுக்கான தயாரிப்புகளும் அவ்வாறு ஆக்கப்பட்டுள்ளன. இதை சரியாக விளக்குவதற்கு அரசினால் இயலாமலுள்ளது. போருக்குப்பின் மாதங்கள் மற்றும் வருடங்கள் ஓடி மறைந்துவிட்ட பின்னரும் முக்கியமாக உள்நாட்டுப் பிரச்சினையாக கருதப்பட வேண்டிய ஒன்று இப்போது சர்வதேசத்தின் கவலைகளாக எழுந்துள்ளன. தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் மீதமுள்ள தமிழ் அரசியற் கட்சிகள் மற்றும் சமூகங்களுக்கு அதில் ஒரு சிறிய பங்கு

(11ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணாநிதி ஐயாவுக்கு திறந்த மடல்

நான் பிறக்கும் முன்னரே அரசியலுக்கு வந்தவர்கள் நீங்கள். உங்களுக்கு ஆலோசனை சொல்வதற்கு எனக்கு எந்தவித அருகதையும் இல்லைத்தான். அது எனக்கு நன்றாகவே தெரியும். ஆனாலும் உங்களிடம் சில கேள்விகளைக் கேட்கவேண்டும் என்று மனது உந்துவதால் இந்த மடலை வரையவேண்டி ஏற்பட்டுவிட்டது.

அண்மைக்காலமாக நீங்கள் ஈழத்தமிழர்மீது காட்டிவரும் அக்கறைக்கு முதலில் நன்றி கூறித்தான் ஆகவேண்டும். தமிழீழத்திற்கு குறைந்த எந்தத் தீர்வையும் ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்று அடம்பிடித்ததன் விளைவாக முள்ளிவாய்க்காலில் பிரபாகரன் தனது முடிவைத் தேடிக்கொள்ள நேர்ந்ததுபோல, நீங்களும் தமிழ் ஈழம் தான் உங்களது இலட்சியம் என்றும் என் உயிரைக்கூட தமிழ் ஈழத்திற்காக கொடுப்பேன் என்றும் அண்மையில் சபதம் எடுத்துக்கொண்டபோதே இந்தக் கடிதத்தை எழுதவேண்டும் என்று நினைத்தேன்.

பல லட்சம் கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களுடனும், வான் படை, கடற்படை, தரைப்படை என்று முப்படைகளுடனும் போரிட்ட பிரபாகரனால் கூட எடுக்கமுடியாத தமிழ் ஈழத்தை நீங்கள் நினைத்தால் எடுத்துவிட முடியும் என்பது எனக்கு தெரியாததல்ல. தமிழ்நாட்டில் உள்ள ஒரு கிராமத்திற்கு தமிழ்ஈழம் என்று பெயர் வைத்து விட்டு இந்தோ தமிழ் ஈழம் மலர்ந்து விட்டது என்று நீங்கள் அறிக்கை விட்டாலும் விடுவீர்கள். முரசொலியில் உங்கள் அறிவிப்பைப் பார்த்துவிட்டு உங்கள் தொண்டர்கள் பட்டாசுகொழுத்தி மகிழ்வார்கள்.

இலங்கையில் யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது ஒரு நாள் திடீரென்று நீங்கள் மரினா கடற்கரையில் அண்ணா சிலை முன்பாக உண்ணாவிரதம் இருந்தீர்கள். சில மணி நேரங்களில் உண்ணாவிரதத்தை கைவிட்டபோது என்ன சொன்னீர்கள் என்பது ஞாபகம் இருக்கும் என்று நம்புகின்றோம். இலங்கை அரசு இனிமேல் பீரங்கி போன்ற கனரக ஆயுதங்களை பாவிக்கமாட்டோம் என்று உறுதியளித்திருக்கின்றார்கள். அதனால் உண்ணாவிரதத்தை கைவிடுவதாக அறிவித்தீர்களே, ஒரு கிலோ மீட்டர் சுற்றளவுள்ள இடத்தில் மூன்று லட்சம் மக்கள் முடக்கப்பட்டிருந்தபோது அவர்கள் மீது பீரங்கித் தாக்குதல் நடாத்தினால் தான் உயிரிழப்பு வரும் என்று நீங்கள் நம்பியது எப்படி ஐயா?. அது தான் இருக்கட்டும் நீங்கள் உண்ணாவிரதம் இருந்தது ஏப்ரல் 27ம் திகதி. ஆனால் அதற்குப்பின்னரும் பீரங்கித் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன என்பது தெரியாமலா இருந்தீர்கள்? உடனே மீண்டும் உண்ணவிரதம் இருந்து மத்திய அரசை உலுப்பியிருக்கலாம். அதுதான் இல்லையென்றாலும், உங்கள் தயவில் இயங்கிய மத்திய அரசை உலுப்பி எடுத்திருக்கலாமே. இப்போது மூன்று ஆண்டுகளின் பின்னர் உங்களுக்கு பொய் கூறிவிட்டது சிறிலங்கா அரசு. அதுகும் யுத்த குற்றம்தான் என்று அறிக்கை விடத்தெரிந்த உங்களுக்கு இதற்குக் கூட மூன்று ஆண்டுகள் தேவைப்பட்டது ஏன்?.

ஆட்சியில் இருந்தபோதும் சரி இப்போதும் சரி நீங்கள் தொடர்ந்து மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்துக்கொண்டிருக்கின்றீர்களே. அந்தக் கோரிக்கையை இன்னும் தீவிரமாக செய்யலாம் என்று உங்களுக்கு தோன்றாதது ஏன்? மத்திய அரசில் இன்னமும் ஒட்டிக்கொண்டு இருப்பதைவிட்டுவிட்டு, மத்திய அரசிலிருந்து வெளியே வந்துவிடுவேன் என்று ஒரேயொரு தடவை மிரட்டல் விட்டுப்பாருங்கள் பார்க்கலாம். அவ்வாறு மிரட்டல் விட்டு வெளியேறி விட்டால் மத்திய அரசில் உங்கள் மூத்த புதல்வர் இப்போது அனுபவித்துவரும் பதவியை இழக்கவேண்டிவரும் என்ற கவலையை முதலில் விட்டுவிட்டு மத்திய அரசில் இருந்து வெளியே வாருங்கள்.

> **மத்திய அரசில் இன்னமும் ஒட்டிக்கொண்டு இருப்பதைவிட்டுவிட்டு, மத்திய அரசிலிருந்து வெளியே வந்துவிடுவேன் என்று ஒரேயொரு தடவை மிரட்டல் விட்டுப்பாருங்கள்**

தமிழ்ஈழம்தான் எனது இலட்சியம் என்று கோருகின்ற நீங்கள், அதற்கு தமிழ் ஈழத்திலிருக்கும் தமிழ் மக்கள் தயாராக இருக்கின்றார்களா என்பதை அறிய முற்பட்டதுண்டா?. தமிழ் மக்களின் அரசியல் தலைமை இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமேயே இருக்கின்றது. அவர்கள் கூட தமிழ்ஈழம் என்பதை மறந்து பல வருடங்கள் ஆகிவிட்டன. சாத்தியமாகக் கூடிய ஒன்றை கேட்டு போராட்டம் நடாத்தினால் அது கிடைத்துவிட்டால் அதற்குப்பின்னர் பேசுவதற்கு எதுகும் இல்லாமல் போய்விடும் என்பதற்காக கிடைக்கமுடியாத ஒன்றைக் கேட்டால்தான் தொடர்ந்து போராட்டம் நடாத்திக்கொண்டே இருக்கலாம் என்ற உங்கள் எதிர்பார்ப்பினால் ஈழத்தில் வாழும் தமிழ் மக்களுக்கு எந்தப்பிரயோசனமும் ஏற்படப்போவதில்லை.

ஈழத்தில் வாழும் தமிழ் மக்களுக்கு அதிகாரத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கோ அல்லது அவர்களின் நலன்களை கவனிப்பதற்கோ இலங்கை அரசுடன் பேசித்தான் செய்தாகவேண்டும். அனால் அதைவிட முக்கியமான ஒரு தேவை உங்களால் தீர்க்கப்படவேண்டியிருக்கின்றது.

உங்கள் நாட்டிற்கு உயிர்தப்பி அகதியாக வந்துசேர்ந்த எம் உறவுகளில் பலர் விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின்பேரில் தமிழகச் சிறைகளில் பல ஆண்டுகளாக தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றனர். முதலில் இவர்களை விடுதலை செய்யுமாறு மத்திய அரசை வலியுறுத்துங்கள். இது ஒன்றும் ஐநா வரை சென்று தீர்வுகாணவேண்டிய விவகாரம் இல்லை.

அதுபோல உங்கள் நாட்டில் அகதிகள்ாக வந்துசேர்ந்த ஈழத்து அகதிகளை முகாம்களில் அடைத்து வைத்திருக்காமல் அவர்களை சாதாரண மக்களாக தமிழக மக்களோடு மக்களாக கலந்து வாழ அனுமதிக்குமாறு மத்திய அரசைக் கோருங்கள். உங்களை நம்பி வந்த ஈழத்தமிழர்கள் உங்கள் கண் முன்னேயே சிறைகளிலும் முகாம்களிலும் அடைபட்டு கிடக்கையில், ஈழத்தில் வாழும் தமிழ் மக்கள் பற்றி அக்கறை காட்டுவது அவசியம்தானா?. முதலில் அவர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றி வையுங்கள்.

இன்னுமொன்று: ஈழத்து நிலைமைகள் தொடர்பாக யாராவது உங்களிடம் தகவல்களைத் தந்தால் அது பற்றிய உண்மை நிலைமைகளை முதலில் ஈழத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழ் மக்களிடம் கேட்டு தெரிந்துகொண்டு பின்னர் அறிக்கை எழுதுங்கள். அண்மையில் நீங்கள் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் வடக்கு கிழக்கில் 374 இந்து ஆலயங்கள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளதாக தெரிவித்திருந்தீர்கள். அதனைப் படித்த ஈழத்தமிழர்கள் என்ன செய்திருப்பார்களோ தெரியவில்லை. அதனைப் படித்தபோது எனக்கு தமிழ்த் திரைப்படம் ஒன்றில் நடிகர் விவேக்கின் நகைச்சுவைக் கட்டம் ஒன்றுதான் ஞாபகத்திற்கு வந்தது. அந்தப் படத்தில் ஒருவர் வீதியிலுள்ள எத்தனையாவது மைல் என்ற அடையாளத்தைக் குறிக்கும் கல்லுக்கு பூஜை செய்துகொண்டிருப்பார். அதைப்பார்த்துவிட்டு விவேக் கேட்டபோது அவர் அதனைச் சிவலிங்கம் என்று பூஜைசெய்வதாகக் கூறுவார். யாழ்ப்பாணத்திற்கான பிரதான பாதையான ஏ9 பாதையோரம் இருந்த அதுபோன்ற மைல் கல்கள் அந்த வீதி அகலிக்கப்பட்டபோது அப்புறப்படுத்தப்பட்டன. இதனைத்தான் யாரோ உங்களுக்கு சிவலிங்கங்கள் தரைமட்டமாக்கப்பட்டன என்று கூறியிருப்பார்களோ தெரியவில்லை.

அதுதான் போகட்டும், நீங்கள் எப்போதும் சிறி சபாரத்தினத்தின் அபிமானி என்பதும், பிரபாகரனை உங்களுக்குப் பிடிக்காது என்பதும் இரகசியமானதல்ல. பிரபாகரன் மீது உங்களுக்கு இருந்த வெறுப்பில்தான் அவர் போரில் மரணிக்கும்வரை மத்திய அரசுக்கு நெருக்கடி கொடுக்காமல் இருந்தீர்கள் என்பது தெரியும். ஆனால் அவர் இறந்த பின்னரும் அவருக்கு அபகிர்த்தி எற்படுத்துவதில் நீங்கள் குறியாக இருக்கின்றீர்கள். பிரபாகரன் தனது மகன் பாலச்சந்திரனை உயிருடன் சிறிலங்கா இராணுவம் பிடிக்கும் அளவிற்கு அவரை வைத்திருந்திருக்கமாட்டார் என்பது பிரபாகரனைத் தெரிந்தவர்களுக்குத் தெரியும். தனது மகன் படையினரிடம் பிடிபடப்போகின்றான் என்று தெரிந்தால் தானே தன் மகனை சுட்டுக்கொல்வாரே தவிர உயிருடன் பிடிபட பிரபாகரன் அனுமதித்திருக்கமாட்டார் என்பது உங்களுக்குத் தெரிந்திருந்தபோதிலும், பாலச்சந்திரனை உயிருடன் பிடித்து ராணுவம் சுட்டுக்கொன்றதாக நீங்கள் அறிக்கையிடுவது பிரபாகரனைக் கேவலப்படுத்துவதற்குத்தான் என்று உங்களைத் தெரிந்தவர்கள் கூறுகின்றார்கள். இனிமேலாவது மரணித்த பின்னராவது பிரபாகரனக் கேவலப்படுத்துவதை நிறுத்திவிடுங்கள்.

**- இராசமைந்தன்**

## ஒரு கற்பனைச் சந்திப்பு

2013 இந்த வருடம் தமிழர்கள் ஐ.நா.சபைக்கு முன்னால் போய் நின்று கத்தும் பொழுது ஐ.நா.சபைகாரர் இந்த முறை நாங்கள் உங்களை அங்கீகரி க்கின்றோம் என்று சொல்லி போட்டு ஒரு 10பேர் மட்டும் உள்ளுக்கு வாங்கோ நாங்கள் சில கேள்விகள் கேட்டு விட்டு நாங்கள் உங்கள் தமிழீழத்தை அங்கீகரிக் கின்றோம் என்று சொல்லி கூப்பிட டார்களாம்.

அதோட அவையளில் பத்துப்பேர் விழுந்தடித்துக் கொண்டு எங்கள் தலைவர், எங்கள் தலைவர் என கத்திக் கொண்டு உள்ள ஓடிச்சினமாம். அவங்கள் சொன்னாங்களாம் பேசாம கத்தாமல் அமைதியாக வரவேண்டும் என்று சொன்னாபோல பேசாம கத்தாமல் வரிசையாக போனவையாம். அங்கு போய் இருந்தவுடன் அவங்கள் கேட்டாங்களாம் உங்களில் யாராவது பிரெஞ்சு மொழி அல்லது ஆங்கிலம் கதைப்பீர்களா என்று கேட்டாங்களாம் அவையளில் ஒருவர் தட்டு தடுமாறி பிரெஞ்சில் இல்லை, நாங்கள் எல்லோரும் தமிழ்தான் கதைப் போம் என சொல்லிச்சினமாம்.

அதோட அவங்கள் தமிழ் மொழிபெயர்ப்பாளர் ஒருவரை கூப்பிட்டு, நாங்கள் உங்களிடம் பலகேள்விகள் கேட்கப்போறோம் அதற்கு எல்லாம் சரியான பதில் சொன்னால் தான் உங்களை நாங்கள் அங்கீகரிப்போம் என்றும் நீங்கள் ஒவ்வொருவராக தான் பதில் சொல்ல வேண்டும் என்று சொன்னாங்களாம்.

முதல் கேள்வியாக தமிழீழத்தில் எத்தனை மாவட்டங்கள் இருக்கு என்று உங்களுக்கு தெரியுமா? என்று கேட்டாங்களாம். ஒருத்தர் சொன்னாராம் ஒரு மாவட்டம் என்று, மற்றவர் மூன்று என்றும், மற்றவர் நாலு என்றும் இப்படியே ஒவ்வொ ருவரும் மாறி,மாறி சொல்லிச்சினமாம். அவங்கள் கடைசியாக கேட்டாங்களாம் ஒழுங்காக சொல்லுங்க எத்தனை மாவட்டம் உண்மையில் இருக்கிறது? என்றவுடன் அங்கு நின்றவர்க ளிற்கிடையே சண்டை வந்திற்றாம்; அதோட பாத்திற்று அவங்கள் சொன்னார்களாம் உங்கள் சண்டையை முதலில் நிப்பாட்டுங்கள் நாங்கள் வேறகேள்வி கேட்கிறோம் என்றார்களாம்.

ஒவ்வொருவராக கூப்பிட்டு கேட்டா ங்களாம் நீங்கள் எந்த மாவட்டத்திலிருந்து வந்தனீங்கள் என்று கேட்டாங்களாம் ஒருவர் சொன்னாராம் குப்பிளான் என்றும், மற்றவர் நெல்லியடி, சங்கானை, கரவெட்டி, கட்டுவன், அரியாலை, இப்படி ஒவ்வொருவரும் தாங்கள் பிறந்த ஊர்களை சொல்லிச்சினமாம் அவற்றை எல்லாம் எழுதி வைத்தானாம்.

பிறகு தமிழீழம் என்று எழுதுங்கள் என்றாங்களாம் அதோடு ஒவ்வொ ருத்தராக எழுத வெளிகிட்டிச்சினமாம். தமிழ் ஈழம், தமிலீலம், தமிளம், தமிழிலம் என்று எல்லாம் எழுதி கொடுத்திச்சினமாம் பிறகு கேட்டாங்களாம் தமிழில் எத்தனை எழுத்துக்கள் இருக்கு? என்று கேட்டாங்களாம் ஒருத்தரும் ஒழுங்கா சொல்ல வில்லையாம்.

பிறகு கேட்டாங்களாம் ஒருவரை தனியே கூப்பிட்டு உயிர் எழுத்துகள்? எத்தனை யிருக்கிறது மெய் எழுத்துகள் எத்தனையிருக்கு? என்று கேட்டாங்களாம். அவர்சொன்னாராம் உ,யி,ர் மூன்று எழுத்து மெ,ய் இரண்டு எழுத்து என்றாராம்.

பிறகு, புலி இயக்கம் பயங்கரவாத இயக்கம் அல்லவா? என்று கேட்டாங்களாம் அதற்கு அவர்கள் சொன்னார்களாம் புலிஇயக்கம் எப்படி பயங்கரவாத இயக்கமாகும் என்று கேட்டிச்சினமாமாம். அப்ப ஒரு பெண்ணுக்கு குண்டுகட்டி அனுப்பி தற்கொலைக்கு படையாக்கி கொல்லுவது பயங்கரவாதமில்லையா? என்று கேட்டார்களாம் அது எப்படி பயங்கரவாதமாகும்? என இவையல் கேட்க அவங்கள் பேசாசாம இருந்தாங்களாம்.

பிறகு, உங்களை புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்திற்கு அனுப்பினால் போய் இருப்பீர்களா? என கேட்டாங்களாம் ஆளாளுக்கு நின்று முழுசிச்சினமாம். அதோட அவங்கள் கடைசியாக சொன்னா ங்களாம் உங்களுக்கு தமிழும் தெரியவில்லை உங்களுக்கே புலிகளின் கட்டுபாட்டிலோயே போய் இருக்க விரும்பவில்லை அப்படியிருக்க எப்படி நீங்கள் வைக்கும் கோரிக்கையை ஏற்றுக்கொள்வது? என்று கேட்டு விட்டு நீங்கள் இங்குவேலை செய்கிறீர்களா? எனக்கேட்டார்களாம் இவையள் ஓம் என்று சொல்லியிருக்கினம்.

அந்தவேலை உங்களுக்கு வேண்டுமா? என்று கேட்டாங்களாம் இவையல் 'ஓம்" என்று தலையாட்டிச்சினமாம் அதையாவது ஒழுங்காக போய் செய்யுங்கள். அல்லா விட்டால் நாங்கள் பிடிச்சு அனுப்பி விட்டிருவம் என்றவுடன் விழுந்தடிச்சு ஓடிவந்தவையாம் அதோட அவங்கள் திரும்பவும் கூப்பிட்டு வாசல் மட்டும் எங்கள் தலைவர் எங்கள் தலைவர் எனக் கத்தக் கூடாது என்றும் உங்களுக்கு கத்துகிற நேரம் முடிஞ்சுது ஆகவே வெளியில் நிற்பவர்களையும் எனிமேல் கத்தாமல் கலைந்து போகும் படியும் சொல்ல சொல்லி அனுப்பி வைத்தார்களாம்!!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து கொழும்பில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்!





ஐக்கிய நாடுகள் சபை மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து கொழும்பில் கடந்த வாரம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டது.

விஹாரமகாதேவி பூங்காவில் ஆரம்பமான இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஐநா அலுவலகத்தில் முடிவடைந்தது.

புலிகளினால் கடத்தப்பட்ட தங்களுடைய உறவுகளை மீட்டுத்தருமாறும் ஐக்கிய நாடுகள் சபைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷங்களை எழுப்பினர்.

அத்துடன் ஜெனிவாவுக்கு சென்றுள்ள தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை கைது செய்யுமாறும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் கோஷங்களை எழுப்பினர்

# இந்தியாவில் இலங்கையர்களுக்கு போதியளவு பாதுகாப்பு

இந்தியாவில் வாழும் இலங்கையர்களுக்கு போதியளவு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது. குறிப்பாக தென்னிந்தியாவில் வாழ்கின்ற இலங்கையர்களுக்கு காவல்துறையினர் கூடுதல் பாதுகாப்பு வழங்கியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் சில தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டங்களினால் இலங்கையர்களுக்கு பாதிப்பு கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே இடம்பெற்ற போராட்டங்கள் ஆர்ப்பாட்டங்களின் போதும் இந்திய காவல்துறையினர் இலங்கையர்களுக்கு போதியளவு பாதுகாப்பை வழங்கியதாகத் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் அமைந்துள்ள இலங்கை நிறுவனங்களுக்கு பாதுகாப்பு வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும், இதற்கு மத்திய அரசாங்கம் சாதகமான பதிலை அளிக்கும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்களை அகற்ற நடவடிக்கை!

இலங்கையில் சுற்றுலா பயணிகளின் வருகை வீதத்தை அதிகரிப்பதற்காக கடற்கரை யோரங்களில் அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்களை அகற்றப்போவதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது.

வியாபார நோக்கில் உள்ளூர்வாசிகளால் அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்கள் சுற்றுச்சூழலுக்கு பிரச்சினைகளை தோற்றுவித்துள்ளதுடன் பிரபல சுற்றுலா தளங்களுக்கு வரும் சுற்றுலா பயணிகளுக்கும் அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாக அமைச்சு கூறியுள்ளது.

இந்த வருட சுற்றுலா பருவகாலத்தின்போது அண்ணளவாக 3 இலட்சம் சுற்றுலா பயணிகளை கவர்ந்த ஹிக்கடுவையில் கடற்கரையை சுத்தம் செய்யும் நிகழ்ச்சித்திட்டம் ஒன்று சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினாலும் கரையோர பாதுகாப்பு திணைக் களத்தினாலும் செயற்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைவாக இந்த பகுதியில் 30 வரையிலான அரைச்சுவர்களும் எட்டு கட்டிடங்களும் இடித்து தரைம ட்ட மாக்கப்பட்டுள்ளன. இடிபாடுகள் அகற்றப்பட்டும் தூய்மையான கடற்கரையாக இப்பகுதி கரையோர பாதுகாப்பு திணைக் களத்திடம் ஒப்படைகப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# வட மாகாணத்தின் அபிவிருத்திக்கு ஜப்பானிய அரசாங்கம் நிதியுதவி



வட மாகாணத்தின் அபிவிருத்திக்கு ஜப்பானிய அரசாங்கம் நிதியுதவியளித்துள்ளது. சுமார் நான்கு மில்லியன் அமெரிக்க டொலர் நிதி ஐக்கிய நாடுகள் மனித குடியிருப்பு நிறுவனத்தின் ஊடாக ஜப்பானிய அரசாங்கத்தினால் வழங்கப்படுகிறது.

வட மாகாணத்தில் மோதல்களால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் சமூக கீழ்க்கட்டமைப்பு புனர்நிர்மாணம் மற்றும் வசதிகளை ஏற்படுத்தும் செயற்திட்டத்திற்காக இந்நிதி வழங்கப்படுகின்றது.

இது தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு கடந்த வாரம் புதன்கிழமை கொழும்பிலுள்ள ஜப்பானிய தூதுவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இடம்பெற்றது.

இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் நொபுஹிதொ ஹொபொ மற்றும் ஐக்கிய நாடுகள் மனித குடியிருப்பு நிறுவனத்தின் ஆசிய பசுபிக் பிராந்திய அலுவலகத்தின் சிரேஸ்;ட மனித குடியிருப்பு அலுவலர் யொசினொபு புகுசாவா ஆகியோர் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் ஜானக சுகததாச, வட மாகாணத்தின் அபிவிருத்தி தொடர்பான ஜனாதிபதி செயலணியின் செயலாளர் எஸ்.பி. திவாரத்ன ஆகியோர் முன்னிலையில் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தம் கைச்சாத்திடப்பட்டது.

## மறைந்த வெனிசூலா அதிபருக்கு ஜனாதிபதி அனுதாபம்!

வெனிசூலா ஜனாபதி ஹியுகோ சாவேஷின் மறைவிற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அனுதாபம் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பான அனுதாப செய்தியினை வெனிசூலாவின் பதில் ஜனாதிபதிக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அனுப்பியுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அனுப்பியுள்ள அனுதாப செய்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,


மறைந்த ஜனாதிபதி வெனிசூலா நாட்டின் உண்மையான புதல்வராவார்.

அத்துடன் நாட்டின் அபிவிருத்தி மற்றும் நலன்புரி செயற்பாடுகளுக்கு பாரிய பங்களிப்பினை செலுத்தியுள்ளதுடன் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு வலுவான ஆதரவாளராகவும் இருந்துள் ளார்.

இலங்கையின் நண்பரான சாவோஷ், இரு நாடுகளுக்குமான உறவை வளர்ப்பதற்கு பாரிய பங்களிப்பினை மேற்கொண்டுள்ளார்.

# இந்த அரசாங்கம் செய்த பிழை: ரணில் விக்ரமசிங்க குற்றஞ்சாட்டு!

2006 ஆம் ஆண்டு மனித உரிமை பேரவையை வரவேற்றமை அதற்கு மனித உரிமை மீறல்களை விசாரிப்பதற்கான அதிகாரங்களை வழங்க ஒப்புக் கொண்டமை மற்றும் நாட்டில் மனித உரிமைகளை பேணுவது தொடர்பாக பொறுப்பேற்றமை ஆகியவை இந்த அரசாங்கம் செய்த பிழைகளாகும் என்று எதிர்க்கட்சியின் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்ரமசிங்க குற்றஞ்சாட்டினார்.



2007 ஆம் ஆண்டு யூன் மாதம் மனித உரிமை பேரவையை உருவாக்குவது தொடர்பான தீர்மானம், 2006 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதி 60/25 தீர்மானத்தை ஏற்றுக்கொண்டமை மற்றும் மனித உரிமைகளை பாதுகாப்பதில் அரச சார்பற்ற நிறுவனங்களின் வகிபாகத்தை அதிகரித்தமை போன்ற அரசாங்கத்தின் நடவடிக்கைகள் காரணமாகவே இவ வருடம் மனித உரிமை அமர்வில் நாடு ஆபத்தான நிலைமைக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது என்றும் அவர் சொன்னார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் கட்சி செயற்பாட்டாளர்கள் முன்னிலையில் கடந்த வாரம் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், பொருளாதார, சமூக, கலாச்சார அல்லது மனிதாபிமான மற்றும் உரிமைகள் போன்ற சர்வதேச பிரச்சினைகளை மொழி, சமய வேறுபாடின்றி தீர்ப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டதை அரசாங்கம் அங்கீகரித்தள்ளது என்றும் அவர் கூறினார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்தியச் செய்திகள்**

# கூடங்குளம் அணு மின் நிலையம் ஏப்ரலில் உற்பத்தியைத் தொடங்கும்!

நீண்டகாலமாக தாமதமாகி வரும் கூடங்குளம் அணு மின் நிலையம் ஏப்ரல் மாதத்தில் உற்பத்தியைத் தொடங்கும் என மத்திய அரசு கூறியுள்ளது.

இது தொடர்பான கேள்விகளுக்கு பிரதமர் அலுவலக விவகாரங்களுக்கான இணைய மைச்சர் வி.நாராயணசாமி மக்களவையில் எழுத்து மூலம் அளித்த பதிலில் கூறியிருப்பதாவது:



கூடங்குளம் அணு மின் நிலையத்தின் முதல் பிரிவில் உள்ள உலையை இரண்டாவது முறை சூடேற்றுவதற்கும், முழு பரிசோதனைக்கும் அணுசக்தி ஒழுங்குமுறை வாரியம் (ஏ.இ.ஆர்.பி.) ஜனவரி 24ஆம் தேதி அனுமதி வழங்கியது. இதையடுத்து, ஏ.இ.ஆர்.பி. குழுவினர் முன்னிலையில், அணு மின் கழக பொறியலாளர்கள் தொடர்ந்து சோதனை மேற்கொண்டு வருகின்றனர். ஏப்ரல் மாதத்தில் உற்பத்தி தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அணு உலைகளின் பாதுகாப்பு கருதி, நிலநடுக்கம், சுனாமி, புயல், வெள்ளம் உள்ளிட்ட இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படாத வகையில் கூடங்குளம் அணு மின் நிலையம் சர்வதேச தரத்தில் வடிவமைக்க ப்பட்டுள்ளது.

முன்னதாக கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது, சில பிரச்னைகள் இருப்பது தெரிய வந்தது. அவை பொறியாளர்களைக் கொண்டு சரிசெய்யப்பட்டது. பிறகு பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள ப்பட்டன. இதுபோல இரண்டாவது பிரிவை வரும் அக்டோபர் மாதத்தில் செயல்பாட்டுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்விரு பிரிவுகளின் மூலம் மொத்தம் 2,000 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும். இதில் தமிழகத்துக்கு 925 மெகாவாட் வழங்கப்படும். தவிர கூடுதலாக 100 மெகாவாட் வழங்குவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது. மீதம் உள்ள மின்சாரம் கேரளம், கர்நாடகம், புதுச்சேரி ஆகியவற்றுக்கும் பகிர்ந்து அளிக்கப்படும்.

## மிஹின் லங்கா அலுவலகம் மீது தாக்குதல்!

தமிழகத்தில் மதுரையில் இலங்கை அரசுக்கு எதிரான போராட்டங்கள் வலுவடைந்து வரும் நிலையில், இலங்கை விமான நிறுவனம் ஒன்றின் அலுவலகத்தை நாம் தமிழர் கட்சியை சேர்ந்தவர்கள் கடந்த வாரம் அடித்து நொறுக்கினர்.

வழக்கறிஞர்கள் ஆர்ப்பாட்டம், மறியல் போராட்டம் போன்றவற்றைத் தொடர்ந்து சுப்ரமணியசுவாமியின் அலுவலகம் தாக்கப்பட்டது.இந்த நிலையில் ஆதித் தமிழர் பேர வையைச் சேர்ந்தவர்கள் திடீரென ரெயில் மறியல் போராட்டம் நடத்த முயன்றனர். ரயில் நிலையம் நோக்கி முன்னேறிய அவர்களை போலீசார் கைது செய்து, நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.இதனைத் தொடர்ந்து, இலங்கை விமான நிறுவனமான 'மிகின் லங்கா' நிறுவனத்தின் டிக்கெட் புக்கிங் ஆபீஸை நாம் தமிழர் கட்சியை சேர்ந்தவர்கள் அடித்து நொறுக்கினார்கள்.

இந்த நிறுவனத்தின் டிக்கெட் முற்பதிவு அலுவலகம் மதுரை காளவாசல் பகுதியில் அமைந்துள்ளது. நாம் தமிழர் கட்சியைச் சேர்ந்த 30 பேர் திடீரென இந்த அலுவலகத்தை அடித்து நொறுக்கினார்கள். கண்ணாடிக் கதவு, கம்ப்யூட்டர், பிரிண்டர், டேபிள் உள்ளிட்ட பொருட்கள் சேதமடைந்தன.

## இலங்கையுடன் நட்புறவையே இந்தியா விரும்புகிறதாம்!

### காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர்

இலங்கையுடன் நட்புறவையே இந்தியா விரும்புவதாக, காங்கிரஸ் கட்சியின் தேசிய செய்தித் தொடர்பாளர் அபிஷேக் சிங்வி தெரிவித்தார்.

இதுகுறித்து பெங்களூரில் கடந்த வாரம் வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் இந்தியா தலையிட விரும்பவில்லை. இலங்கையுடன் நட்புடன் இருக்கவே இந்தியா விரும்புகிறது. இலங்கை விவகாரத்தில் நடுநிலைமை வகிப்பதே இந்தியாவின் நிலைப்பாடாகும். நமது அண்டை நாடுகளுடன் நட்புடன் இருப்பதே நமது கொள்கை. ஜெனீவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சில் கூட்டத்தில் அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்துக்கு ஆதரவு அளிக்க வேண்டிய கட்டாயம் இல்லை என்றார்.

## காங்கிரஸ் மீண்டும் ஆட்சியைப் பிடிக்கும்: மன்மோகனின் பகல் கனவு என்கிறது பாஜக!

வரும் தேர்தலில் மீண்டும் காங்கிரஸ் ஆட்சியைப் பிடிக்கும் என்று பிரதமர் மன்மோகன் சிங் பகல் கனவு காண்கிறார் என பாஜக கூறியுள்ளது.

மக்களவையில் குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசிய பிரதமர் மன்மோகன் சிங், பாஜக.வை கடுமையாக விமர்சித்தார்.

தனது ஆணவப் பேச்சால் பாஜக மீண்டும் தோல்வியடையும். அவர்களால் இரும்பு மனிதர் எனக் குறிப்பிடப்பட்ட அத்வானியின் நிலை என்னவாயிற்று? என்று மன்மோகன் கேள்வியெழுப்பி இருந்தார்.

இந்நிலையில், மன்மோகன் சிங்கிற்கு பாஜக பதிலடி கொடுத்துள்ளது. பாஜக செய்தித் தொடர்பாளர் பிரகாஷ் ஜவடேகர், அத்வானி பற்றிய பிரதமரின் கருத்தைப் பொருட்படுத்தப் போவதில்லைஎன்றார். அவர் மேலும் கூறியது: ஐக்கிய முற்போக்குக் கூட்டணி 2014ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியமைக்கும் என மன்மோகன் சிங் கருதுகிறார். அவ்வாறு அவர் பகல் கனவு காண்பதை நாங்கள் தடுக்கப் போவதில்லை. தவறான எண்ணத்துடன் அவர் இருந்தால் அதை நாங்கள் தடுக்க மாட்டோம் என்றார் ஜவடேகர்.


## ஹெலிகாப்டர் பேர ஊழல்: சிபிஐ அறிக்கையின்பின்முடிவு!

ஹெலிகாப்டர் பேர ஊழல் புகாரில் சிக்கியுள்ள அகஸ்டா வெஸ்ட்லேண்ட் நிறுவனத்தை கருப்பு பட்டியலில் சேர்க்க முடிவு செய்யவில்லை என்று மத்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி தெரிவித்தார்.

மாநிலங்களவையில் கேள்வியொன்றுக்கு அளித்த பதிலில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியதாவது:

இத்தாலி நிறுவனத்திடமிருந்து ஹெலிகாப்டர் கொள்முதல் செய்வதும், அந்நிறுவனத்துக்கு செலுத்த வேண்டிய தொகையும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தை ஏன் ரத்து செய்யக்கூடாது என்று விளக்கம் கேட்டு அந்நிறுவனத்துக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. அந்நிறுவனத்தை கருப்பு பட்டியலில் சேர்க்க முடிவு செய்யவில்லை.

இந்த விவகாரம் குறித்து சிபிஐ விசாரித்து வருகிறது. சிபிஐ அறிக்கை தாக்கல் செய்தபின் மேற்கொண்டு தகவல் தெரிவிக்க முடியும் என்று தெரிவித்தார்.



மற்றொரு கேள்விக்கு பதில் அளிக்கையில், 197 இலகு ரக விமானங்கள் வாங்கும் முடிவு தற்போது பரிசீலனையில் உள்ளது. ராணுவ கொள்முதல் கவுன்சிலின் கருத்துக்குப் பிறகு இது குறித்து முடிவு செய்யப்படும்| என்றும் அவர் தெரிவித்தார்.

## தமிழக காங்கிரஸ் தலைவர்கள் ராகுலுடன் பேச்சுவார்த்தை!

இலங்கை விவகாரம் தொடர்பாக காங்கிரஸ் கட்சியின் இளைஞர் அணித் தலைவர் ராகுல் காந்தியுடன், தமிழக அரசியல்வாதிகள் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். தமிழக காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களே இந்தப் பேச்சுவார்த்தையை நடத்தியுள்ளனர்.



ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு எதிராக, இந்தியா கடுமையான நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டுமென தமிழக காங்கிரஸ் உறுப்பினர்கள் கோரியுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளினால் முன்வைக்கப்பட உள்ள தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவளிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

.மத்திய அமைச்சர்களான சிதம்பரம், ஜீ.கே. வாசன் மற்றும் ஜெயந்தி நடராஜன் உள்ளிட்ட சிலர் ராகுல் காந்தியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

தமிழக மீனவர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் குறித்தும் இந்த சந்திப்பின் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமெரிக்காவிற்கு சிம்மசொப்பனமாக திகழ்ந்த ஹியூகோ சாவேஸ்

வெனிசூலாவை 14 ஆண்டுகள் ஆண்ட இரும்பு மனிதர் என்று பல தலைவர்களலும் மக்களாலும் புகழப்பட்ட ஹியூகோ சாவேஸ் தனது 58வது வயதில் மார்ச் 5ஆம் தேதி காலமானார்.

அவர் காலமான செய்தி வெனிசூலா மக்களை ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தியது. இயேசுநாதருக்கு அடுத்ததாக எங்களுக்கு கிடைத்த மீட்பர் இவர்''- ஹ்யூகோ சாவேஸ் குறித்து அவரது ஆதரவாளர் கண்ணீர் மல்க வெளிப்படுத்திய வார்த்தைகள் இவை.

''அவருக்கு முன்பு இருந்த அரசாங்கங்கள் எங்களை கவனிக்கவே இல்லை. ஆனால் இப்போது அவரால் எங்களது குழந்தைகளின் எதிர்காலம் சுபீட்சமாக இருக்கிறது''.- இதுவும் அவர் பற்றிய இன்னுமொரு குரல்.

சாவேஸ் ஒரு தீப்பொறி சோசலிச வாதியாவார்.

கியூபாவின் அதிபரும் முன்னாள் அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு போராளியுமான பிடல் காஸ்ட்ரோவின் மாணவர், வழி செல்பவர் என்றே சாவேசைக் குறிப்பிட்டுக் கூறலாம். ஐ.நா.வில் அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் (2) பேசிவிட்டுச் சென்றபோது அடுத்ததாக பேச வந்த சாவேஸ் 'ஏதோ துர்நாற்றம் வீசுகிறதே' என்று புஷ் மீது தனது ஆரோக்கியமான எதிர்ப்பை இவ்வாறு வெளிப்படுத்தியது மிகவும் பிரபலமானது

மிகவும் தைரியமான சாவேஸ், முழு கடப்பாடுடன் தேச நலனுடன், மக்கள் நலனையும் காக்கும் கொள்கைகளை வகுத்தார். அமெரிக்க சுரண்டல்வாத ஏகாதிபத்திய கொள்கைகளை மிகத் திறம்பட அவர் தடுத்து வந்தார். இதனால் அமெரிக்கா அவரை குறைந்தது 600 முறையாவது கொலை செய்ய முயன்று தோல்விடைந்திருக்கும். பிடல் காஸ்ட்ரோவின் ராணுவம் தான் இவருக்கு பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து தந்தது.. 1954 ஆம் ஆண்டு பள்ளி ஆசிரியருக்கு மகனாக பிறந்தார் சாவேஸ். 1980ஆம் ஆண்டு இவர் அரசியலுக்கு நுழைந்தார். ரகசிய அமைப்பான புரட்சிகர பொலிவாரிய இயக்கம் என்பதை நடத்தி வந்தார். சைமன் பொலிவார் என்பவர் லத்தீன் அமெரிக்க புரட்சிகளில் முக்கிய பங்காற்றிய தலைவன் புரட்சி வீரன் என்பது குறிப்பிடத்தக்கது.

முதலில் 1992-இல் சாவேஸ் ராணுவ ஆட்சிக் கவிழ்ப்பில் ஈடுபட்டார். இதற்காக அவர் 2 ஆண்டுகள் சிறை செல்ல நேரிட்டது.

பிறகு தனது இயக்கத்தின் பெயரை 5ஆம் குடியரசு என்று மாற்றிய சாவேஸ் அதன் பிறகு ஒவ்வொரு இயக்கமாக சேர வெனிசூலா ஐக்கிய சோஷலிச கட்சி உதயமானது.

1998ஆம் ஆண்டு இந்தக் கட்சி ஆட்சியைப் பிடித்தது. தேர்தல் அறிக்கையில் பெட்ரோலிய வளத்தைச் சுரண்டிக் கொழிக்கும் பணக்காரரர்கள் மற்றும் அமெரிக்க லாப வேட்டை கூட்டுத்தாபனங்களிடமிருந்து மக்களுக்கு விடுதலை கிடைக்கும் என்றார். அதுவே அவரது வெற்றிக்கு வித்திட்டது. முதலில் வந்து ஊழலில் திளைத்துக் கொழித்த ராணுவ அதிகாரிகளை விரட்டினார். பிறகு தேசிய சீர்திருத்த திட்டம் என்ற ஒன்றை தொடங்கினார்.

உலகிலேயே பெட்ரோலிய வளம் அதிகமுள்ள நாடுகளில் வெனிசூலா ஒரு முக்கிய இடம் வகித்ததால் அமெரிக்காவின் கழுகுப் பார்வை வெனிசூலாவை சுற்றியே வந்து கொண்டிருந்தது. ஓரளவுக்கு அதன் பெட்ரோலிய வளத்தைச் சுரண்டுவதில் வெற்றியும் கண்டது அமெரிக்கா. ஆனால் சாவேஸ் பதவியேற்றவுடன் பெட்ரோல் வெனிவலா நிறுவனத்தை முறையாக தேசியமயமாக்கினார். இது மிகவும் ஒரு முக்கியமான, தைரியமான முடிவாகும்! வெனிவலா பொருளாதாரத்தை புரட்டிப் போட்ட சீர்திருத்தமாக இது கருதப்பட்டது.

லாபங்களை மிகத்திறம்பட பல சமூக சீர்திருத்தத் திட்டங்களில் முதலீடு செய்தார். 2000 ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு வரை சமூக பொருளாதார சீர்திருத்தங்களுக்காக 772 பில்லியன் டாலர்களை செலவிட்டது சாவேஸ் அரசு. 1996ஆம் ஆண்டு வறுமை 71வீதமாக இருந்தது தற்போது 21 வீதமாக குறைத்துக் காட்டிய மிகப்பெரிய பொருளாதார சீர்திருத்தத்தை, பல நாடுகள் செய்ய முடியாததை சாவேஸ் செய்து காட்டினார்;. தீவிர வறுமை நிலை 40 சதவீதத்திலிருந்து 7.3வீதமாக குறைந்தது!

இந்தச் சீர்திருத்தங்களினால் 2 கோடி மக்கள் பயன்டைந்தனர்

உணவுப்பொருள் இறக்குமதியை 90 விழுக்காட்டிலிருந்து 30 விழுக்காடாக குறைத்தார் சாவேஸ். 1990ஆம் ஆண்டு குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டு விகிதம் 7.7 சதவீதம் அது தற்போது 5வீதமாக குறைக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் சாவு 1000த்திற்கு 25 என்ற விகிதம் 13ஆக குறைந்தது. ஒவ்வொரு பத்தாயிரம் மக்களுக்கும் சுமார் 50க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் என்ற விகிதத்தில் சுகாதாரம் வளர்த்தெடுக்கப்பட்டது.

96வீத வெனிசூலா மக்களுக்கு சுத்தமான குடிநீர் வசதி செய்து தரப்பட்டது. பள்ளிப்படிப்பு பெறுவோர் சதவீதம் 85ஆக அதிகரித்தது. ஏனெனில் இலவசக் கல்வி திட்டமே காரணம், பல்கலை படிப்பு வரை இலவசக் கல்வித் திட்டம் நீட்டிக்கப்பட்டது.

சாவேஸினால் நடைமுறைப்படுத்தப்பட்ட சீர்திருத்தங்களெல்லாம் வெள்ளை மேட்டுக்குடியினரிடையே கடும் எரிச்சலை ஏற்படுத்தியது. அவர்கள் இவர் மீது நிறவெறி வசை பாடினர். 2002ஆம் ஆண்டு சாவேஸ் ஆட்சியை கலைக்க நடத்தப்பட்ட பெரும் சதியை அமெரிக்கா வரவேற்று பேசியது, அமெரிக்க பத்திரி;கைகள் ஜனநாயக சக்திகள் ஒன்று சேரட்டும் என்று எழுதி மகிழ்ந்தது.

இந்த கலைப்பிற்கு வித்திட்ட துணை அதிபர் கார்மோனா எஸ்டங்கா நீக்கப்பட்டார். இவர் ஏழை மக்களுக்கு உதவிகரமாக சாவேஸ் உருவாக்கிய 48 மறுவிநியோக சட்டத்தை ஒட்டு மொத்தமாக ரத்து செய்தார்.

ஆனால் மக்களின் ஆதரவு சாவேசுக்கு நிரம்ப இருந்ததனால் கலைப்பு தோல்வியில் முடிவடைந்தது.

ஆனாலும் அமெரிக்கா இவரை ஜனநாயக விரோதி என்றும் வெனிசூலாவை அழிக்க வந்தவர் என்றும் பிரச்சாரம் செய்தனர்.

சாவேசின் இந்த சீர்திருத்த செயல்பாடுகள் உலகத் திருடர்களான சர்வதேச நிதியம் மற்றும் உலக வங்கியின் செயல்பாடுகளை, சுரண்டல்வாதக் கொள்கைகளை தடுப்பதாக அமைந்தது.

வெனிசூலா பெட்ரோலிய காலனி அல்ல, பெட்ரோலிய இறையாண்மையை வெனிசூலா வென்று விட்டது. சர்வதேச நாணய நிதியத்தை ஒழித்து சர்வதேச மனிதார்த்த வங்கி நிறுவப்படவேண்டும் என்று அறைகூவல் விடுத்து அமெரிக்க முதலாளிகளதும் அவர்களது அடிவருடி அரசியல் தலைவர்களதும் வெறுப்பை சம்பாதித்துக் கொண்டார் சாவேஸ்.

உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் ஒழியவேண்டும் என்று அவர் உண்மையில் விரும்பினார். 2011ஆம் ஆண்டு லத்தீன் அமெரிக்க,அராபிய நாடுகள் கூட்டமைப்பை சாவேஸ் உருவாக்கினார்.

ஸ்பானிய, அமெரிக்க காலனியாதிக்கத்தினால் பொருளாதாரச் சுரண்டல்களினால் லத்தீன் அமெரிக்க மக்கள் தங்களுக்கேயுரிய பண்பாட்டை இழந்து சுரண்டலுக்கு ஆட்பட்டு பின் தங்கிய நாடுகளாக இருந்து வந்ததை சாவேஸ் சீர்திருத்தி ஒரு முழு புதிய சோசலிச கட்டுமானத்தை உருவாக்க நினைத்தார்.

அமெரிக்காவுக்கு எதிரான சாவேஸின் கடுமையான நிலைப்பாடும், அவரது பெட்ரோ- இராஜதந்திரமும், பல நாடுகளின் தலைநகரங்களில் அவருக்கு நல்ல வரவேற்பை பெற்றுக்கொடுத்தது.

ரஷ்யா, சீனா, இரான் போன்ற நாடுகளுடன் அவர் மிகவும் வலுவான பொருளாதார மற்றும் பாதுகாப்பு உறவுகளைப் பேணினார்.

இத்தனை சீர்திருத்தங்களையும் தனது நாட்டு மக்களுக்காகவும் உலகின் ஏழை மக்களுக்காகவும் மேற்கொண்டு வந்த சாவேஸ் இன்று இந்த உலகில் இல்லை. அவர் கடைப்பிடித்த கொள்கைகள் அவர் கட்டியெழுப்பிய பொருளாதார வளர்ச்சி அந்நாட்டில் தொடர்ந்து நீடிக்குமா என்பது கேள்விக்குரியதே.

வெனிசூலாவில் பொருளாதார பிரச்சினைகள் மற்றும் அரசியல் ஸ்திரமி ன்மை ஆகியவற்றுக்கு மத்தியிலும், சாவேஸின் மரணத்துக்கு பின்னரும் அவர் விட்டுச் செல்லும் அவரது செல்வாக்கு மேலும் பலமாகவே திகழலாம், ஆனால், வெனிசூலாவுக்கான அவரது சர்வதேச அபிலாஷைகள் அவரோடு மரணித்துப் போகலாம் என்று ஆரூடம் தெரிவிக்கப்படுகின்றது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய .....(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் உள்ள இலங்கைக்கான இந்திய பிரதி உயர் ஸ்தானிகரின் இல்லத்திலேயே இந்த சந்திப்பு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா தலைமையிலான குழுவினரே இந்த சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தனர்.இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய பிரதி உயர் ஸ்தானிகரை சந்தித்து கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்ப ட நடவடிக்கைகள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக கலந்துரையாடினோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி, பட்டிப்பளை, வவுணதீவு, செங்கலடி, கிரான்,வாகரை ஆகிய யுத்தத்தினால் கடுமையாக பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் தொடர்பில் இந்திய துணைத்தூதுவரின் கவனத்துக்கு கொண்டுவந்தோம்.

குறிப்பாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்தியாவினால் மேற்கொள்ள ப்பட்டுவரும் வீட்டுத்திட்டத்தின் மூலம் வீடுகளை கூடுதலாக பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்தோம்.

இதன் கீழ் முதல் கட்டமாக மட்டக்களப்பு மாவட்டத்துக்கு 2000 வீடுகளை தருவதற்கு இணக்கம் தெரிவித்த துணைத்தூதுவர் அதேபோன்று அம்பாறை மாவட்டத்துக்கு 1000 வீடுகளையும் மற்றும் திருகோணமலை மாவட்டத்துக்கு 1000 வீடுகளை ஒதுக்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இதனடிப்படையில் முதல் கட்டமாக வெல்லாவெளி, வவுணதீவு,கிராண் பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஏப்ரல் முதல் வாரத்தில் இந்த வீடமைப்பு பணிகள் ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது என்றும் பிரதியமைச்சர் தெரிவித்தார். இது தொடர்பான ஆரம்பக்கூட்டம் அடுத்த வாரமளவில் மட்டக்களப்பில் நடைபெறவுள்ளதாகவும் பிரதியமைச்சர் தெரிவித்தார்.இதேபோன்று ஏனைய யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும் வீடுகளை அமைத்துக்கொடுப்பதற்கு கட்டம் கட்டமாக நடவடிக்கையெடுப்பதாக துணைத்தூதுவர் உறுதியளித்துள்ளதாகவும் பிரதி அமைச்சர் முரளிதரன் தெரிவித்தார்.

## உறுப்பு நாடுகளின் .... (1ம் பக்கத் தொடர்ச்சி)

காணாமல் போகடிக்கப்படுவது, மனித உரிமைச் செயல்பாட்டாளர்கள், ஊடக வியலாளர்கள் போன்றோர் தொடர்ந்து அச்சுறுத்தலுக்கு உள்ளாவது, நீதித்துறையின் சுதந்திரத்துக்கு எழும் அச்சுறுத்தல்கள் ஆகியவை குறித்து இந்தத் தீர்மானம் கவலை வெளியிடுகிறது.

மேலும், இலங்கை அரசு, அரசியல் அதிகாரப் பரவலைச் செய்யத் தவறியது உட்பட வெளிப்படையாகக் கொடுத்த உறுதிமொழிகளை நிறைவேற்றத் தவறிவிட்டது என்றும் அந்த தீர்மான வரைவு கூறுகிறது.

மேலும் ஐ.நா மன்ற மனித உரிமைகள் ஆணையர் நவி பிள்ளை இலங்கையில் நல்லிண க்கத்தையும், பொறுப்புகூறலையும் மேம்படுத்த ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப உதவி தருவது குறித்து வெளியிட்ட அறிக்கையை வரவேற்கும் இந்த தீர்மான வரைவு, சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தையும், மனித நேய சட்டத்தையும் மீறிய செயல்கள் குறித்து ஒரு நம்பகமான, சுயாதீனமான, சர்வதேச விசாரணைய கோரி ஆணையர் விடுத்த அழைப்பையும் கவனத்தில் எடுத்துக்கொள்கிறது.இந்த ஆணையரின் அறிக்கையில் கூறப்பட்டிருக்கும் பரிந்துரைகளை இலங்கை அரசு அமல்படுத்த வேண்டும் என்றும் அந்த தீர்மான வரைவு கோருகிறது.மேலும் இலங்கை அரசு, ''ஐ.நா மன்ற நீதிபதிகள் சுதந்திரத்துக்கான சிறப்புத்னதர்|| மற்றும் மனித உரிமை செயல்பாட்டாளர்கள் போன்ற குழுக்கள் இலங்கைக்கு வந்து செல்ல தங்குதடையற்ற அனுமதி தருமாறும் இந்த வரைவுத்தீர்மானம் கோருகிறது.இத்தீர்மான வரைவு பின்னர் வாக்கெடுப்புக்கு எடுத்துகொள்ளப்படக் கூடும்.''ஒட்டுமொத்தத்தில் இது ஒரு பலமான தீர்மானம். கடந்த வருடத்தில் இருந்து இது வாதங்களை மேலும் முன்னெடுத்துச் செல்கிறது.| என்று சர்வதேச மன்னிப்பச் சபையின் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

## மும்மொழி.....(1ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் அனைத்து பிரஜைகளும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் தெரிந்து கொள்ளக் கூடிய வகையில் செயற் திட்டங்கள் முன்னெடுக்கப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்தியாவின் தொழில்நுட்ப உதவியை பெற்றுக் கொள்ளும் ஜனாதிபதியின் திட்டத்திற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

## படகுகள் .... (1ம் பக்கத் தொடர்ச்சி)

பணிகளை சில மாதங்களுக்கு முன்னர் ஆரம்பித்துள்ள போதிலும் இலங்கையிலிருந்து ஆஸ்திரேலியாவிற்கான சட்ட விரோத பயணங்கள் தொடர்வதாக தகவல்கள் மூலம் அறியமுடிகின்றது.

இலங்கையிலிருந்து தமது நாட்டிற்குள் படகுகள் மூலம புகலிடம் கொரி வருபவர்கள் தொடர்பாக ஆஸ்திரேலியா அரசாங்கம் இலங்கையில் உள்நாட்டு ஊடகங்கள் மூலம் அறிவித்தல்களை விடுத்துள்ளது. தமது நாட்டில் தொழில் வாய்ப்புகள் இல்லை, அநேகமாக மீண்டும் இலங்கைக்கே திருப்பி அனுப்புதல் மற்றும் விசேட கவனிப்புகள் எதுவும் இருக்காது என அந்த அறிவித்தலில் கூறப்பட்டுள்ளது.ஆஸ்திரேலியா குடிவரவு மறறும் பிரஜாவுரிமைகள் அமைச்சர் பிரெண்டன் ஒ கொணர் விடுத்துள்ள செய்தியுடன் இந்த அறித்தல் வெளியாகியுள்ளது.

## அமெரிக்க .... (1ம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது.

தீர்மானத்தின் உள்ளடக்கம் தொடர்பில் அமெரிக்காவுடன் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளும் உத்தேசம் கிடையாது என ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஜெனீவாவிற்கான இலங்கை நிரந்தரப் பிரதிநிதி ரவினாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஜெனிவாவிற்கான அமெரிக்க நிரந்தரப் பிரதிநிதி எலீன் டோனாஹிடம் அவர் இதனைத் தெளிவுபடுத்தியுள்ளார். அமெரிக்காவின் தீர்மானத்தை இலங்கை முழுமையாக நிராகரிக்கின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தீர்மானத்தின் உள்ளடக்கம் தொடர்பில் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளும் திட்டம் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தீர்மானம் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பக்கச்சார்பான, ஒரு தலைப்பட்சமான தீர்மானங்கள் குறித்து இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளும் திட்டமில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## தனக்குள்ளே..... (12ம் பக்கத் தொடர்ச்சி)

அல்லது ஒரு பங்குமே இல்லை. அல்லது அப்படித் தோன்றுகிறது. ஒரு குறிப்பிட்ட நிலைக்குப் பின்னர், சிறிலங்கா தமிழ் புலம்பெயர் சமூகம் கூட உலகளாவிய திட்டத்துக்கு பொருத்தமற்றதாக மாறிவருவது அதிகரித்துள்ளது. அது தாங்கள்தான் விஷயத்தை தூண்டி வருவதாக எண்ணி மகிழ்வதற்கு அவர்களுக்கு நன்றாக இருக்கலாம் - அத்தகைய மாயையை, ரி.என்.ஏ. உட்பட்ட ஏனைய தமிழ் அரசியல் கட்சியினர்கள் இனிமேலும் பின் பற்றுவதாகத் தோன்றவில்லை - மற்றும் உலகம் அவர்கள் பின்னாலிருந்து அழைப்பு விடுக்கிறது. மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபை மற்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் போன்ற மோசமான அலையை சேர்ந்த சர்வதேச தூதர்கள்; அங்கு தங்கள் ஏலத்தை நடத்துகிறார்கள். இதன் மறுபக்கம்தான் சிறிலங்காவிலும் நடக்கிறது அதுவும் கூட உண்மையாக இருக்கலாம்.

மனித உரிமை மீறல்கள்தான் உலக மெங்கும்; மனச்சாட்சியை உசுப்புவதற்கான ஆணை என்றிருந்தால், இந்த தொண்டு நிறுவனங்கள் யாவும் உட்புறமாகப் பார்த்து, பொறுப்புக்கூறல் மற்றும் பாதுகாப்புக்கான உரிமை போன்ற பொறுப்புக்கான விடயங்களை இதே வீரியத்துடன் காட்சிப் படுத்த வேண்டும், ஏற்கனவே இந்த பாதுகாப்புக்கான உரிமை பற்றிய விடயத்திற்கு ஆப்கானிஸ்தான் ஒரு உதாரணமாகத் திகழ்கிறது, ஆனால் அடுத்த வருடம் முதல் அங்குள்ள மக்களை யார் காப்பாற்றப் போகிறார்கள், மற்றும் அதற்கான பொறுப்பை யார் ஏற்றுக்கொள்ளப் போகிறார்கள்? இதன் கருத்து சிறிலங்காவின் போர்க் குற்றங்கள் மற்றும் பொறுப்புக்கூறல் போன்ற விடயங்கள் தீர்க்கப்படக்கூடாது என்பதோ மற்றும் வரிசைப் படுத்தப்படாமல் அப்படியே விட்டுவிட வேண்டும் என்பதல்ல.

அந்த வகையான மேடைப் பிரசங்கங்கள் நடத்துவதும் அப்படியான ஒரு விடயம்தான். இது மற்றொரு யதார்த்தமாக வாழவேண்டிய விடயம். சிறிலங்கா அரசாங்கம் யுத்தத்துக்கு பின்னான நிலையான சமாதானத்தை ஆரம்பிக்கும் முயற்சிகளில் தவறிவிட்டது கூட சர்வதேச அரங்கில் அது தொலைந்து விட்டதாகத் தெரிவதற்கான ஒரு காரணம். எல்லாவற்றுக்கும் மேலாக இந்தமுறை ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் கொண்டு வரப்படவுள்ள பிரேரணை, கடந்த வருடத்தின் ஒதுக்கீடுகள், விளக்கங்கள், அக்கறைகள், மற்றும் நடவடிக்கைகள் என்பனவற்றுக்காக காத்திருக்கப் போவதில்லை. கடந்த வருடம் சிறிலங்கா ஒரு வாக்களிக்கும் அங்கத்துவத்துக்கான தகுதியை கொண்டிருக்கவில்லை. இந்த வருடமும் அந்த உரிமை அதற்கு இல்லை. இந்த நாடு எதிர்ப்பு பிரேரணைகளை கடந்த தசாப்தங்களில் வழக்கமாக உள்நாட்டிற்கு அருகில் உரத்த குரலில் நிகழ்த்தி வந்ததை போல இந்த முறை உலகெங்கும் நிகழ்த்தி வருகிறது.

உலகளாவிய நாடுகளின் விடயத்தில் சிறிலங்காவின் உள்ளுர் கவலைகளை எப்படியாயினும் கவனத்தில் எடுக்கப் போவதில்லை, அதை அரசாங்கம் ஒரு முறை செய்து பார்த்துவிட்டது, மற்றும் அமெரிக்கப் பிரேரணைக்கு எதிராக வாக்களிக்கும்படி அங்குள்ள அரசாங்கங்களை இணங்கச் செய்வதற்கு முயன்று வருகிறது. சிறிலங்கா வாக்கை இழந்தாலும் அதன் பிரச்சார நினைவுகள், அதன் போட்டிப் பிரச்சாரகர்கள் ஏற்கனவே விஜயம் செய்துள்ள அங்குள்ள அரசாங்கங்களின் மனங்களில் நிலைத்து நிற்கும். ஒரு சில விதிவிலக்குகளை தவிர்த்து அங்கு நடப்பதெல்லாம் முன்கூட்டியே தயாரிக்கப்பட்டு ஏற்பாடான கணிப்புகள்தான். அவை பாதிக்கப்பட்ட நாட்டின் நடத்தை மற்றும் அக்கறைகளை அடிப்படையாக கொண்டவை அல்ல. ஆனால் சம்பந்தமில்லாத மூன்றாம் தரப்பினர் அமெரிக்க அனுசரணையுடனான பிரேரணைக்கு சார்பாகவும் அல்லது எதிராகவும் உள்நாட்டு அரசாங்கங்கள் மீது, நடத்தும் தள்ளுகை மற்றும் அழுத்தங்களை அடிப்படையாக கொண்டிருக்கும். சிறிலங்காவை யார் ஆட்சி செய்தாலும் அல்லது சிறிலங்காவின் நிலையில் எந்த நாடு இருந்தாலும் இதுதான் நடக்கும்.

இறுதிக் கணிப்பில் சிறிலங்கா உலகின் ஏனைய நாடுகளை சார்ந்திருக்க தேவையில்லை. அது சிறிலங்காவாசியாகிய சிறிலங்கா மக்களையும், மற்றும் சிறிலங்காவாசிகளுக்கு பின்னால் அணி திரள்வதை தெரிவு செய்த மக்களையும் மட்டுமே சார்ந்த விடயம். சிறிலங்கா தமிழர்கள் விடயத்தைப் பொறுத்தமட்டில் தீர்க்கப்படாதவை இன்னும் அதிகம் இருக்கிறது. ஆனால் அதற்கு இன்னும் பல தசாப்தங்கள் போக வேண்டும். சர்வதேச அரங்கிற்கு இப்போது இழுத்து வரப்பட்டிருக்கும் இனப்பிரச்சினை சுதந்திரமாகத் தீர்வதற்கு சிங்களவர்களும் மற்றும் முஸ்லிம்களும் ஒன்றிணைய வேண்டும். மற்றும் எந்த நாட்டுக்கு இன்னமும் ஆளணி அதிக அளவில் தேவைப்படுகிறதோ அந்த நாட்டுக்கு செல்பவர்கள் தங்கள் சொந்த நாட்டு அரசியலை சொந்த நாட்டிலேயே விட்டுவிட்டுச் செல்லவேண்டும். வளைகுடா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் பணிப்பெண்களாகவும் தொழிற்சாலை தள உதவியாளர்களாகவும் கடினமாக உழைப்பவர்களின் பிள்ளைகள் ஒரு புதிய உலகிற்கான உருமாற்றத்துக்கு ஏற்ற தகுதிகளைப் பெற்று ஒரு புதிய ஆரம்பத்தை தொடங்க வேண்டும். சிறிலங்கா அரசாங்கம் அதன் தற்போதைய கவலைகளை, பூகோளஅரசியல் மற்றும் உலகளாவிய அரசியல் இரண்டையும் அவற்றின் வழ்நிலைகளுக்கு பொருத்தமாக பூகோள மூலோபாயத்துடன் வெவேறாக இணைத்து, வளர்ந்து வரும் யதார்த்த நிலைக்கு ஏற்படி அதை மாற்றியமைப்பதற்கான காலம் இன்னமும் கடந்துவிடவில்லை. தமிழர்கள் விரும்புவதும், யுத்தத்துக்கு பின்னான நடவடிக்கையாகவும் மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பேச்சுவர்த்தைகளில் ஈடுபட விரும்புவதுமான, கணிசமானளவு அதிகாரப் பகிர்வை உட்படுத்திய ஒரு அர்த்தமுள்ள ஒரு தீர்வினை இனப்பிரச்சினைக்கு வழங்குவதற்கு ஏற்றபடி தனது சொந்த நிலைப்பாட்டை அரசாங்கம் மாற்றிக்கொள்வதற்கான காலமும் இன்னமும் கடந்துவிடவில்லை.

இனப்பிரச்சினையை சர்வதேச மயமாக்குவதால், அது செல்லும் வழி அதன் சொந்த வரம்புகளைக் கொண்டதாக உள்ளது. விரைவாகவோ அல்லது தாமதமாகவோ தமிழர்கள் அதைக் கற்றுக்கொள்ள நேரிடும். அது அவர்கள் சிறிலங்காவுக்கு திரும்ப வருவதற்கு எண்ணும்வேளை, ஆனால் அரசாங்கம் அதற்கான வழிகள் இனிமேல் இல்லை, என்று நினைக்கும்படி ஆகிவிடும். உலகளாவிய ரீதியில் நடக்கும் தற்போதைய பிரச்சாரம், இதற்கு மேல் எதுவும் இல்லை என்பதை உறுதி செய்ய உதவியிருக்கிறது. அது சிறிலங்கா அரசாங்கம், இப்போது அது வெளிபடுவதற்கு காத்திருந்துவிட்டு, பின்னர், எதிர்காலத்தை பற்றி எச்சரிக்கை செய்வதைக் காட்டிலும் அதனை இப்போதே இங்கேயே தடுக்க வேண்டியது அவசியம்,

(இந்த எழுத்தாளர் ஒப்சேவர் றிசேர்ச் பவுண்டேசனின் சென்னைப் பிரிவின் பணிப்பாளர்)

தேனீ மொழிபெயர்ப்பு: எஸ்.குமார்

நன்றி-தேனீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுகதிர்
ELUKATHIR

## படகுகள் மூலம் புகலிடம் கோரி வருவதை தவிர்க்குமாறு கோரிக்கை!

இலங்கையிலிருந்து படகுகள் மூலம் புகலிடம் கோரி தமது நாட்டிற்குள் வருவதை தவிர்த்துக் கொள்ளுமாறு ஆஸ்திரேலியா அரசாங்கம் மீண்டும் பகிரங்கமாக அறித்துள்ளது.
படகுகள் மூலம் புகலிடம் கோரி சென்றவர்களை நாட்டிற்கு திருப்பி அனுப்பி வைக்கும்

(11ம் பக்கம் பார்க்க)

# பிற நாடுகளின் உள்விவகாரங்களில் இந்தியா தலையிடாது!

பிற நாடுகளின் உள்விவகாரங்களில் இந்தியா தலையிடாது என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்சித் தெரிவித்துள்ளார்.
புதுடெல்லியில் கடந்த வாரம் ஆசிய பசுபிக் அனைத்துலக வர்த்தக சம்மேளன மாநாட்டில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.
"அடுத்தவரின் பிரச்சினையில் நாம் எப்போதும் தலையிடுவதில்லை. மற்ற நாடுகளின் விவகாரங்களில் தலையிட்டு ஒரு தரகராக செயல்பட இந்தியா விரும்புவதில்லை. பிற நாடுகளின் உள்விவகாரங்களில் இந்தியா எப்போதும் தலையிடாது. ஆலோசனை கேட்காதவர்களுக்கும், பாதுகாப்பான, நல்ல ஆலோசனையை, சரியான நேரத்தில் இந்தியா வழங்கும். இந்தியா இயல்பாக செயற்படவே விரும்புகிறது. எந்தக் காரணமும் இல்லாமல், நாம் ஏதாவது ஓர் அணியில் இணைந்து கொண்டு உரக்கக் குரல் கொடுக்க வேண்டியது அவசியமில்லை. அதே நேரத்தில் மற்றொரு நாடு குறித்து தாக்கிப் பேச வேண்டிய தேவையும் இல்லை. அனைத்துலக அளவில் ஒரு நாடு அதிகாரம் செலுத்தும் வகையில் செயற்படுவதை இந்தியா எப்போதும் ஏற்றுக் கொண்டதில்லை.
ஒரே நேரத்தில் இரு எதிரி நாடுகளுடன் நம்பிக்கையுடன் பேச இந்தியாவால் முடியும். மென்மையாக நடந்து கொள்வதாக இந்தியா மீது அடிக்கடி குற்றம் சாட்டப்படுவதுண்டு. உலக நாடுகள் அனைத்தும் செழிப்புடன் இருக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தால், யாருடனும் கடுமையாக நடந்து கொள்ள வேண்டியதில்லை. அதனால் உலக காவல்காரன் கருத்துக்கு நாங்கள் ஆதரவு அளிப்பதில்லை. சீனாவிடமிருந்து கூட சில விடயங்களை கற்று, ஆரோக்கியமான போட்டியைச் சந்திக்கவே இந்தியா விரும்புகிறது என்று அவர் தெரிவித்துள்ளார்.

# மும்மொழிக்கொள்கையை அமுல்படுத்த இந்திய உதவிக்கு அமைச்சரவை அனுமதி!

இலங்கையின் மும்மொழிக் கொள்கையை அமுல்படுத்த இந்தியாவின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
நாட்டில் மும்மொழிக் கொள்கையை அமுல்படுத்தும் தேசிய செயற் திட்டத்திற்கு இந்தியாவின் தொழில்நுட்ப ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் எண்ணக்கருவிற்கு அமைய பத்து ஆண்டுகளில் மும்மொழிக் கொள்கையை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக் கப்படுகிறது.

(11ம் பக்கம் பார்க்க)

## இந்திய வீட்டுத்திட்டம்: அடுத்த மாதம் கிழக்கில்!

இந்திய வீட்டுத்திட்டத்தின் கிழக்கு மாகாணத்துக்கென ஒதுக்கப்பட்ட வீடுகளின் முதல் தொகுதி நிர்மாணப்பணிகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.
இந்திய உதவித்திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்தில் அமைக்கப்படவுள்ள வீடுகள் தொடர்பில் இலங்கைக்கான இந்திய பிரதி உயர் ஸ்தானிகருடன் நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்ததாக பிரதியமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(11ம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை விவகாரங்களை அரசியல் கருவியாக பயன்படுத்தக் கூடாது

மனித உரிமை விவகாரங்களை அரசியல் கருவியாக பயன்படுத்தக் கூடாது என ரஸ்யா தெரிவித்துள்ளது.
ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு அநீதி இழைக்கப்பட்டால் அதற்கு எதிராக குரல் கொடுக்கப்படும் என இலங்கைக்கான ரஸ்ய தூதுவர் அலெக் ஸான்டர் கர்ச்சாவா தெரிவித்துள்ளார்.
இலங்கை - ரஸ்ய உறவுகளுக்கு 56 ஆண்டுகள் பூர்த்தியாவதனை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.
மனித உரிமை விவகாரம் தொடர்பில் உலக நாடுகள் ஒரேவிதமான கொள்கைகளையும் கோட்பாடுகளையும் பின்பற்ற வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு போதியளவு உதவிகளை வழங்குவதே எமது நோக்கம் என அவர் சுட்டிக்காட்டிள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் இம்முறை அமர்வுகள் இலங்கைக்கு சவாலாகவே அமையும் என அவர் தெரிவித்துள்ளார். யுத்தத்தின் பின்னர் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வரும் நல்லிணக்க முனைப்புக்கள் திருப்தி அளிக்கும் வகையில் அமைந்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மட்டக்களப்பில் முஸ்லிம்களுக்கு எச்சரிக்கைத் துண்டுப்பிரசுரம்!

மட்டக்களப்பு மாவட்டத்தின் சில பகுதிகளில் எச்சரிக்கை எனும் தலைப்பிட்டு துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. அந்த துண்டு பிரசுரங்கள் முஸ்லிம்களுக்கு எதிராகவே விநியோகிக்கப்பட்டுள்ளன.
இந்த துண்டுப்பிரசுரங்களுக்கு திராவிட சேனை எனும் அமைப்பு உரிமை கோரியுள்ளது.
மட்டக்களப்பு நகர் மற்றும் ஏறாவூர் உள்ளிட்ட பல பிரதேசங்களின் இந்த துண்டுபிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.
குறித்த துண்டுபிரசுரத்தில்,
இஸ்லாமிய நாடுகளின் ஆதரவுடன் இலங்கை முஸ்லிம் அரசியல் வாதிகளின் வழிநடத்தலுடன் இலங்கையை எதிர்காலத்தில் இஸ்லாமிய நாடாக மாற்றும் திட்டத்தின் முதற்கட்டமாக கிழக்கு மாகாணத்தை கிழக்கிஸ்தானாக மாற்றுவது. இதனை அடிப்படையாக கொண்டு தமிழர் தாயக பூமியை கையகப்படுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
தமிழர்களின் வியாபார நிலையங்களை விலையாகவும் குத்தகைக்கும் பெற்று ஆக்கிரமிப்பை ஆரம்பித்துள்ளனர். தமிழர் தாயக பிரதேசத்தில் வியாபாரம் செய்யும் முஸ்லிம் வியாபாரிகளை உடன் வெளியேற்றுமாறு எமது அமைப்பு எச்சரிக்கின்றது.
அத்துடன் இந்த துரோகத்திற்கு துணைபோகும் தமிழ்கட்டிட உரிமையாளர்களே உங்கள் சொத்தை அழிவிலிருந்து பாதுகாத்துக்கொள்ளுங்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org